100

# தமிழின் கதை



கிராமஜோதி நூலகம்
மயிலாப்பூர் :: சென்னை

# தமிழின் கதை

ஆசிரியர் :

ச. கு. கணபதி ஐயர், எம்.ஏ.

கிராமஜோதி நூலகம்

33, டி. எஸ். வி. கோவில் தெரு,

மயிலாப்பூர் :: சென்னை—4.

முதற் பதிப்பு: பிப்ரவரி, 1953
உரிமை பதிவு

'தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்.'

—பாரதியார்.

விலை ரூ. 1-4-0.

PRINTED AT THE B. N. PRESS, MADRAS.

# முகவுரை

தமிழ்மொழி வளர்ந்து பரவிவரும் காலம் இது. ஆகவே அந்த மொழியின் சரித்திரம் பலருக்கும் தெரியவேண்டும். இந்த நோக்கத்தோடு 'கிராம ராஜ்யம்' என்ற மாதப் பத்திரிகைக்குத் 'தமிழ் மொழி' என்ற தலைப்பின்கீழ் 1950 ஏப்ரல் முதல் தொடர்ச்சியாக ஒன்பது கட்டுரைகள் எழுதினேன். இப்பொழுது புத்தக வடிவில் அவற்றை வெளியிடுவதனால் அவை சில திருத்தங்களைப் பெற்றுள்ளன. புதியனவாகச் சில கட்டுரைகளும் இதில் எழுதிச் சேர்க்கப் பெற்றுள்ளன. தமிழ் மொழியின் வரலாற்றை (*History of the Tamil Language and Literature*) மிகவும் சுருக்கமாகவும் எளிதாகவும் இதில் கூறியுள்ளேன். பொருளின் எளிமை தோன்றத் 'தமிழின் கதை' என்ற பெயர் பொருத்தமாக உள்ளது. உள் தலைப்புக்களும் பிற்சேர்வாக உள்ள பொருள் அகராதியும் வாசகர்களுக்குப் பொருளைத் தெளிவாக்கும் என்பது என் நம்பிக்கை.

தமிழ் வரலாற்றைப் பொது மக்கள் புரிந்து கொள்ளுமாறு எழுதும்படி என்னை ஊக்கி, என் கட்டுரைகள் 'கிராம ராஜ்ய'த்தில் வெளி வர உதவிய கிராம நல இலாகா அதிகாரி ஸ்ரீ ஜி. வெங்கடாசலபதி அவர்களுக்கும் 'கிராம ராஜ்ய'ப் பத்திரிகையாருக்கும் எனது நன்றி.

மயிலை,
10-2-1953.

ச. கு. க

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தமிழ்மொழி | ... | 1 |
| 2. | மொழிக் குடும்பங்கள் | ... | 5 |
| 3. | அந்த நாளில் | ... | 10 |
| 4. | இலக்கியங்களும் மதமும் | ... | 19 |
| 5. | பக்திப் பாடல்கள் | ... | 25 |
| 6. | பிற்காலச் சமண நூல்கள் | ... | 31 |
| 7. | பொற்கால இலக்கியம் | ... | 36 |
| 8. | இருண்டகால நூல்கள் | ... | 41 |
| 9. | கலைகள் | ... | 46 |
| 10. | தமிழ்ப் புலவர்கள் | ... | 51 |
| 11. | ஐயப்பாடுள்ள கதைகள் | ... | 60 |
| 12. | புது யுகம் | ... | 65 |
| 13. | வளரும் தமிழ் | ... | 71 |
| 14. | களைப் பயிர் | ... | 78 |
| 15. | தமிழும் தமிழரும் | ... | 81 |
| | பொருள் அகராதி | ... | 89 |

# 1. தமிழ் மொழி

உலகத்தில் எத்தனையோ மொழிகள் உள்ளன. அவற்றுள் நேற்றோ இன்றோ பிறந்தவை சில; பழைய மொழிகள் என்று சொல்லக்கூடியவை சில. இக்காலத்தில் பழம் மொழிகளிற் பல பேச்சு வழக்கில் இல்லை; அவை எழுத்தளவில்-நூல் வடிவில் மட்டும் திகழ்கின்றன. அவற்றைப் பேசுவோர் இலர். ஆகையால் அவற்றை உலக வழக்கிறந்தொழிந்த மொழிகள் என்பர் சிலர். இது முற்றிலும் பொருந்தாது. அவை உலக வழக்கில்—பேச்சு வழக்கில் இல்லாவிடினும் வேறு மொழிகளுடன் கலந்துபோய், தம்மை ஏற்றுக் கொண்ட மொழிகளுக்கு ஆக்கம் தந்து விளங்குகின்றன. அவை இக்காலத்தில் பெற்றுள்ள உருவங்கள் இரண்டு: ஒன்று பல மொழிகளிலும் புகுந்துறையும் தன்மை; மற்றொன்று ஏட்டு வழக்கில் தனித்து நின்று விளங்கும் தன்மை.

நம் தமிழ் மொழியும் பழம் மொழிகளுள் ஒன்றே. ஆனால் அது பேச்சு வழக்கிலும் உள்ளது; நூல் வழக்கிலும் உள்ளது. எப்பொழுதோ தோன்றியது ஆயினும் 'இளவண் தமிழ்' என்றும்

'கன்னித் தமிழ்' என்றும் புலவர்களால் பாராட்டப் பெற்றது. ஒரு புலவர் தமிழ் மொழியைத் தெய்வமாகக் கருதி,

'உலகவழக் கழிந்தொழிந்து சிதையாஉன்
சீரிளமைத் திறன்வியந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே'

என்று போற்றுகின்றார். போற்றும்போது அவர் மனம் வேறு செயல்களை மறந்து ஒருமைப் பாட்டைப் பெறுகின்றது. அதனால் 'செயல் மறந்து வாழ்த்துதும்' என்கின்றார் அவர்.

மற்றொரு புலவர் கதிரவனைத் தமிழ் மொழிக்கு உவமை காட்டி விண்ணில் இயங்கும் கதிரவனுக்குரிய பண்புகள் எல்லாம் மண்ணில் இயங்கும் தமிழ் மொழிக்கும் அமைந்துள்ளன என்கிறார். 'சூரியன் உதயகிரியாம் ஓங்கலில் (மலையினிடத்து) தோன்றுகிறான்; உயர்ந்தோர்கள் தன்னைத் தொழ அவன் விளங்குகிறான்; ஏங்குகின்ற ஒலியையுடைய கடல் சூழ்ந்த பூமியின் புறவிருளை அவன் அகற்றுகின்றான். தமிழ் மொழியும் அகத்திய முனிவர் உறையும் பொதியில் என்ற ஓங்கலினிடத்துப் பிறந்தது; அறிவில் உயர்ந்த புலவர் முதல் யாவரும் தன்னைத் தொழ அது விளங்குகின்றது; ஞாலத்திலுள்ளவர்களின் மனத்திருளை அகற்றவல்லது' என்பதனைச் சிலேடையாக அப் புலவர் பெருமான் கூறியுள்ளார்.

'ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருள்அகற்றும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னேர் இலாத தமிழ்'

என்பது அவர் பாடிய பாட்டு. முன்னடிகளில் தமிழுக்குச் சூரியனை ஒப்புக் கூறியவர் பின்னால் 'தமிழ் மொழிக்குப் பிறமொழி ஒன்றும் நேர் இல்லை' என்கிறார். இந்தப் பாட்டு—தமிழின் மேன்மையைப் புலப்படுத்தும்.

வேறொரு புலவர் தமிழை ஒரு குழந்தையாக உருவகப்படுத்தி அந்தக் குழந்தை பொதியமலையிலே பிறந்து, பாண்டியருடைய புகழிலே கிடந்து, சங்கத்தின் இருப்பிலே இருந்து............கற்றோர் நினைவிலே நடந்து, நிலமகளின் மருங்கிலே வளர்வதாக அழகு தோன்றக் கூறியுள்ளார். மற்றும் பல அறிஞர்கள் தமிழைப் பாராட்டிக் கூறியுள்ளவற்றுள் ஒரு சில பின் வருவன :

'மல்லிகையின்
வண்டார் கமழ்தாமம் அன்றோ மலையாத
தண்டாரான் கூடற் றமிழ்.'[1]

—மதுரைக்காஞ்சி-பிற்சேர்வு

1. வண்டு ஆர் - வண்டுகள் ஒலிக்கின்ற. தாமம் - மாலை. மலையாத தண் தாரான்—பாண்டியன்; மண்ணவர் எவரும் சூட்டிக்கொள்ளாத பசுவுள்ள ஆரத்தை இந்திரன் சூட்டத் தாங்கிக்கொண்ட உக்கிரகுமார பாண்டியனை எண்ணி இவ்வாறு கூறினர்.

'என்றுமுள தென்றமிழ்.'

—கம்பராமாயணம்

'முத்தமிழால் வைதா ரையுமங்கு
வாழ வைப்போன்.'

—கந்தரலங்காரம்

'இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்.'

—தமிழ்விடுதூது

'அறைகடல் உலகிற் பாடை
அனைத்தும்வென் றாரி யத்தோ
டுறழ்தரு தமிழ்த்தெய் வத்தை
உள்நினைந் தேத்தல் செய்வாம்.'[2]

—காஞ்சிப்புராணம்

'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்.'

—சுப்பிரமணிய பாரதியார்

புலவர் பெருமக்கள் இங்ஙனம் புகழ்ந்து கூறும் புனைவினையுடைய தமிழ்மொழியின் முழு வரலாற்றையும் நாம் தெரிந்துகொள்ள வேண்டாமா! பின்வரும் பகுதிகள் தமிழ்ப் பாஷையின் வரலாற்றைக் கூறுவனவாகும்.

2. அறைகடல் - ஒலிக்கின்ற கடல் சூழ்ந்த. பாடை - மொழிகள். ஆரியம் - வடமொழி. உறழ்தரு - ஒப்புமை வாய்ந்த.

# 2. மொழிக் குடும்பங்கள்

## மொழிகளின் தோற்றம்

உலகம் பரந்துபட்டது. அதன் பல பிரிவுகளில் பழங்காலத்தில் அங்கங்கே பல மக்கள் தோன்றி வாழ்ந்து வந்தனர். ஒரு கூட்டத்தாருக்கும் மற்றொரு கூட்டத்தாருக்கும் தொடர்பு இருக்கவில்லை. தாண்ட முடியாத மலைகளும் கடக்க முடியாத கடல்களும் பாலை நிலங்களும் காடுகளும் அந்த அந்தக் கூட்டத்தாரைத் தனித் தொகுதிகளாகவே வைத்திருந்தன. ஒவ்வொரு தொகுதியினரும் ஒவ்வொரு விதமான மொழியைப் பேசி வந்தனர். இங்ஙனம் பல மொழிகள் பிறந்தன.

## பிறமொழிக் கலப்பு

நாகரிகம் வளர வளர, மனிதன் மலைகளையும் கடல்களையும் வனாந்தரங்களையும் காடுகளையும் கடந்து செல்லும் வழிகளை அறிந்துகொண்டான். அந்த அறிவின் காரணமாக ஒரு கூட்டத்தாரை மற்றொரு கூட்டத்தார் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. இந்த வாய்ப்பினால் ஒருவருடைய மொழியின் சொற்கள் மற்றொருவருடைய மொழியிற் கலந்தன. ஒரு மொழியின் அமைப்புக்களைப் பின்

பற்றி மற்றொரு மொழி தன் உருவத்தைத் திருத்தி அமைத்துக்கொண்டது.

ஒரு பாஷையைப் பேசுவோர் பலர் கூட்டம் கூட்டமாகச் சென்று வேறு மொழியைப் பேசும் மக்களிடை வாழலானார்கள். இந்த வாய்ப்பினால் மொழிக்கலப்பு ஏற்பட்டு அதன் காரணமாக ஒரு மொழியிலேயே பல இனங்கள் தோன்றின. இந்த வகைகளிலே தோன்றிய இனங்களும் அவற்றின் தாய் மொழியும் சேர்ந்த கூட்டம் **மொழிக் குடும்பம்** எனப்பட்டது.

## திராவிட மொழிக்குடும்பம்

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், குடகு, துளு, இந்தியாவின் பல்வேறு பாகங்களில் இருக்கிற பழங்குடிகளாகிய மலைவாசிகள் பேசும் பாஷைகள் ஆகிய இவை எல்லாம் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை. திராவிட மொழியைப் பேசி வந்தவர் பல பிரிவுகளாகப் பிரிந்து போய்விட்டனர். ஒவ்வொரு பிரிவினரின் பேச்சிலும் எழுத்திலும் சம்ஸ்கிருதம் என்னும் வடமொழி மிகுதியாகக் கலந்துவிட்டது. வட மொழியைப் பார்த்து அவர்கள் தம் இலக் கணத்தை அமைத்துக்கொண்டனர். திராவிட மொழிக் குடும்பத்தில் தமிழ் மொழிமட்டும் அதிக மாறுபாடுகளைக் கைக்கொள்ளவில்லை. தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலியன பல வேறு பாடுகளைப் பெற்று இன்று வேறு மொழிகளாகப்

பிரிந்து போய்விட்டன. அதனால் வடமொழி நூலார் தமிழையே திராவிடம் என்று கூறுவர். ஒரு குடும்பத்தைச் சேர்ந்தோர் பலர் பல அம்சங்களில் தம்முள் ஒத்திருக்கிறார்கள். இவ்வாறே ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளிலும் ஒருமைப்பாடுகள் பல காணப்படக்கூடும். திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த பல மொழிகளில் நான், நாம், நீ, நீர், அவன், அவள், அவர், அது, அவை என்ற இடப்பெயர்களும் ஒன்று, இரண்டு முதலிய எண்ணுப் பெயர்களும், வேற்றுமை உருபுகளும் கை, கால், கண், தலை, செவி, பல் முதலிய உறுப்புக்களின் பெயர்களும் வா, போ, தின், ஆடு முதலிய வினைச்சொற்களும் பிறவும் ஏறத்தாழ ஒரே விதமாகச் சில வேறுபாடுகளைப் பெற்று வழங்கி வருகின்றன. இந்த ஒற்றுமைகளைக் கொண்டுதான் இந்த மொழிகளை எல்லாம் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஓரின மொழிகள் என்கிறோம்.

## கடல் விழுங்கிய நிலப்பரப்பு

இந்தியாவுக்குத் தெற்கே இந்து மகாசமுத்திரம் இருக்கிறது. பல்லாயிர வருஷங்களுக்கு முன் இந்தக் கடற்பகுதி தரையாக இருந்தது என்றும் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, சுமத்திரா, ஜாவா, பிலிபைன் தீவுகள் முதலியவை உட்பட்ட பகுதி பெரிய நிலப்பரப்பாக இருந்ததென்றும் சரித்திர ஆராய்ச்சியாளரும் நில அமைப்பு நூல் விஞ்ஞானி

களும் (Geologists) சொல்லுகிறார்கள். திராவிட மொழிக்குடும்பம் பரவியிருந்தமை இந்த நிலப் பரப்பில்தான். இந்தப் பரப்பின் பெரும்பாகத் தைக் கடல் விழுங்கியபின் அங்கங்கே தங்கி விட்ட வரின் மொழிகள் பிரிந்து போயின. இந்தியாவி லுள்ள திராவிடக்குடும்ப மொழிகள் மட்டும் தமக் குள் இன்றும் நெருங்கிய ஒற்றுமைகளைப் பெற்று ஓரினம் என்று சொல்லக்கூடிய வகையில் இருக் கின்றன.

## செந்தமிழ்—கொடுந்தமிழ்

இப்பொழுது தமிழ் வழங்கும் நிலம் பல ஜில்லாக்களாகப் பிரிந்திருப்பதுபோல் முந்நூறு நானூறு ஆண்டுகளுக்கு முன் அது பல நாடுக ளாகப் பிரிந்திருந்தது.

1. செந்தமிழ் நாடு
2. தென் பாண்டி நாடு
3. குட்ட நாடு
4. குட நாடு
5. கற்கா நாடு
6. வேணாடு
7. பூழி நாடு
8. பன்றி நாடு
9. அருவா நாடு
10. அருவா வட தலை நாடு
11. மலாடு
12. சீத நாடு
13. புனல் நாடு அல்லது சோழ நாடு

என்பவை அப்பிரிவுகள். இந்தப் பதின்மூன்று நாடுகளில் பாண்டி நாடாகிய செந்தமிழ் நாட்டில் வழங்கி வந்த தமிழே தூய தமிழ் அல்லது செந்

தமிழ் எனப்படும். வேறு பன்னிரண்டு நாடுகளில் வழங்கிய தமிழை இலக்கண நூல்கள் கொடுந்தமிழ் என்று கூறும். கொடுந்தமிழ் எல்லாம் செந்தமிழின் கிளைமொழிகள் எனப்படும். இக்காலத்தில் போக்குவரவு வசதிகள் மலிந்திருப்பதனாலும் பத்திரிகைகளும் புத்தகங்களும் பலவிடங்களுக்குப் பரவுவதனாலும் இது செந்தமிழ், இது கொடுந்தமிழ் என்று பிரித்து அறிவது எளிதாக இல்லை.

# 3. அந்த நாளில்

மக்கள் பழைய காலத்தில் எங்கெங்கே இருந்தார்களோ, அங்கங்கே ஒவ்வொரு மொழி தோன்றியதென்றும், ஓரிடத்து மக்கள் பிறவிடங்களில் உள்ள மக்களுடன் கலந்துகொண்ட சமயங்களில் மொழிக் கலப்பு ஏற்பட்டதென்றும், இந்தக் கலப்பினால் மொழிக் குடும்பங்கள் பல அமைந்தன என்றும், அக் குடும்பங்களுள் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது தமிழ் என்றும், அது இக் காலத்தில் சிறந்திருக்கிறதென்றும் முன் கட்டுரையிற் கூறினோம். இனித் தமிழ் பிறந்த கதை, அதன் ஆதி வரலாறு இவற்றை இங்கே ஆராய்வோம்.

## தமிழின் பிறப்பு

சில புலவர்கள் தமிழின்மீதுள்ள அபிமானத்தால், 'சிவபெருமான் உண்டாக்கிய மொழி இது" என்று எழுதியிருக்கிறார்கள். வேறு சிலர், "அகத்திய முனிவர் பெற்ற குழந்தைத் தமிழ்" என்று கூறியிருக்கிறார்கள். புலவர்கள் இங்ஙனமெல்லாம் கூறுவதை உபசார வார்த்தைகளாகத்தான் கொள்ளவேண்டும். எந்த மொழியும் ஒருவர் பெறத் திடீரென்று ஒரு நாளில் தோன்றவில்லை. பண்பாடு தோன்றாத காலத்து—மக்கள் விலங்குகள்போல் வாழ்ந்து வந்த காலத்தில்—

எழும்பிய சில பொருளற்ற ஒலிகள் நாளடைவில் அர்த்தத்தைப் பெற்று அவற்றின் வழியாகச் சில ஒலிக் குறிப்புக்கள் ஆதியில் தோன்றின. கோபத்தினை அறிவிக்க 'உம்' என்றும், இழிவையும் வெறுப்பையும் காட்டச் 'சீ' என்றும், மகிழ்ச்சியைப் புலப்படுத்த 'ஆகா!' என்றும் இந்தவிதம் ஒவ்வொரு குணத்தையும் பிறருக்குக் காட்டும் பொருட்டு ஒலிகள் சில முதல்முதல் தோன்றியிருக்கவேண்டும். இன்றும் இவ்வொலிகள் நம் மொழியிற் காணப்படுகின்றன. ஒலிகள் தோன்றிய பின் அப்பா, அம்மா, நீர், காய், பழம் முதலிய பெயர்களும் வா, போ, நட, இரு போன்ற வினைகளும் தோன்றின. பழங்கால மக்களின் பேச்சில் சொற்களும் தொடர்களுமே இடம் பெற்றிருந்தன. வாக்கியங்களை அவர்கள் அறியவில்லை. மக்கள் சமுதாயத்தில் பண்பாடு வளர வளர அவர்கள் மொழியும் வளர்ந்து வந்திருக்கவேண்டும். நேர்முகமாக அல்லாமல் படர்க்கையில் உள்ளவர்களுக்கும் தம் செய்திகளைச் சொல்லி அனுப்புவதற்கு வசதியாக இருக்கும் பொருட்டு எழுத்துக்களை ஏற்படுத்திக்கொண்டார்கள் சிலர். எழுத்துத் தோன்றிய பிறகு செய்யுள் வடிவில் சில நூல்கள் தோன்றின. அவற்றை மாதிரியாகக் கொண்டு மொழியை ஒழுங்குபடுத்தவும் இலக்கியத்தைக் குறித்த ஒரு போக்கில் செலுத்தவும் இலக்கணத்தை வகுத்தனர். இலக்கணம் ஏற்பட்ட பிறகு அதனை ஒட்டி மற்றவர்கள் நூல் எழுதலானார்கள்.

தமிழ் ஒன்று மாத்திரம் அன்று ; எந்த மொழியும் இந்த நெறியில்தான் வளர்ந்து வளம் பெற்றிருக்க வேண்டும்.

## அநாதி காலம்

எந்த நாளில் தமிழில் முதல்முதல் நூல்கள் தோன்றின? இலக்கணம் தோன்றியது எந்தக் காலத்தில்? ஆதியில் தோன்றிய சில நூல்கள் எவை? இந்த வினாக்களுக்குச் சரியான விடை கிடைக்காது. காலவரம்பைக் கடந்து நிற்பது தமிழ். முன் கட்டுரையில் கூறியபடி மறைந்த நிலப்பரப்பில் தமிழ் ஆட்சி புரிந்து வந்தது. அச் சமயம் பல நூல்கள் தோன்றின. இலக்கணங்கள் எழுந்தன. அது எந்தக் காலம் என்பது மட்டும் நமக்குத் தெரியாது. கடல் கொண்ட நிலப் பரப்பில் அந்தக் காலத்தில் **முதற் சங்கம், இரண்டாம் சங்கம்** என இரண்டு சங்கங்கள் இருந்தனவென்று அறிகிறோம். பலவேறு இடங்களில் இருந்த புலவர்கள் பாண்டிய மன்னர்களின் ஆதரவைப் பெற்று, குறிப்பிட்ட இடத்தில் கழகத்தை நிறுவி, தமிழை ஆராய்ந்து வந்ததையே நாம் **சங்கம்** என்று குறிக்கிறோம்.

## மூன்றும் சங்கம்

முன் இரண்டு சங்கங்களின் காலம் நமக்கு விவரமாகப் புலப்படவில்லை. அக் காலத்தில் ஏற்பட்ட நூல்கள் பெரும்பாலும் அழிந்து போயின. சில சில பாடல்கள் மட்டும் எஞ்சி நின்றன. தென்

நிலப்பகுதியைக் கடல் கொண்டபின் அங்கிருந்து தப்பிப் பிழைத்து வந்த இரண்டொரு புலவர்கள் சில பாடல்களை மறக்காமல் கொண்டு வந்திருத்தல் கூடும். மூன்றும் முறை ஒரு சங்கம் மதுரையில் நிறுவப்பெற்றது. அச் சங்கத்தில் 49 புலவர்கள் அங்கத்தினராக இருந்தனர். பழம் பாடல்களையும் தாம் புதியனவாக இயற்றிய பாடல்களையும் அவர் கள் திரட்டி ஒழுங்குபடுத்திக் கோவைகளாக (Anthology) வெளியிட்டனர். இங்ஙனம் அடைவு படுத்தித் திரட்டப் பெற்றவை **பத்துப் பாட்டு**, **எட்டுத் தொகை** எனப் பெறும். இவற்றோடு **பதினெண் கீழ்க்கணக்கு** என்ற தொகுதியும் அக் காலத்துத் தோன்றியது.

இவைகளே அல்லாமல் இரண்டாம் சங்க காலத்தில் தோன்றி இன்று வரையிலும் அழி யாமல் இருப்பது **தொல்காப்பியம்** என்ற இலக்கண நூல் ஆகும்.

தொல்காப்பியம், பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்பவைகளைப் பற்றிச் சுருக்கமாக நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

### தமிழரின் பண்பாட்டு நூல் தொல்காப்பியம்

தொல்காப்பியம் தோன்றிய காலம் நமக்குத் தெரியாது. ஆனல் அந்த நூலிலிருந்து பழந் தமிழ் மக்களின் வாழ்க்கை, உயர்ந்த பண்பாடு முதலியன நமக்குத் தெளிவாகப் புலனுகின்றன. தொல்காப்

பியம் எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருள் இலக்கணம் என மூன்று பகுதிகளை உடையது. இவற்றுள் பொருள் இலக்கணமே உயர்ந்தது. பொருள் இலக்கணம் அகம், புறம் என இரண்டு வகைப்படும். காதலன் காதலிகளின் அன்பு முறைத் திருமணம், இல்வாழ்க்கை முதலிய வற்றைத் தெரிவிப்பது அகப் பொருள் ; தமிழ் மக்களின் வீரம், அரசியல், போர்ச் செயல்கள், துறவுநிலை, அரசர், அறிவர், வணிகர், வேளாள ரின் நிலை முதலியவற்றை அறிவிப்பது புறப் பொருள். ஆகவே, தொல்காப்பியத்தைத் தமிழ ருடைய பண்டைக்காலச் சமுதாய நூல் என்று கூறவேண்டும். தொல்காப்பியர் காலத்திலேயே ஆரிய நாகரிகமும் தமிழ்ப் பண்பாடும் ஒன்று பட்டுப் போயின. கடைச்சங்கத்திலும் பிற்காலத்தி லும் தோன்றிய நூல்கள் எல்லாம் தொல்காப் பியத்தில் கூறப்பட்ட அகம், புறம் என்ற முறை களை ஒட்டியே எழுதப் பெற்றவை.

## பத்துப் பாட்டு

திருமுருகாற்றுப் படை, பொருநர் ஆற்றுப் படை, சிறுபாணாற்றுப் படை, பெரும்பாணாற்றுப் படை, முல்லைப் பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடு நல்வாடை, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப் பாலை, மலைபடு கடாம் என்னும் பத்து நூல்கள் பத்துப் பாட்டு என்று வழங்கும். இவை கூறுவன யாவை என்பதற்கு மாதிரியாக இரண்டொன்றை இங்கே கூறுவோம்.

முருகக் கடவுளை வழிபட விரும்பும் ஒருவனுக்கு ஒரு புலவர், 'முருகன் இன்ன இன்ன இடத்தில் இந்த இந்தக் கோலத்தோடு இருப்பான்; அவனை நீ கண்டு நலம் பெறல் எளிது' என்று வழி காட்டுவதாக எழுதப் பெற்ற நூல் திருமுருகாற்றுப் படை எனப்படும். முருகனது வருணனை, அவனை வழிபடும் பல முறைகள் முதலியன இந் நூலில் காணப்படுகின்றன.

நெடுஞ்செழியன் என்று ஒரு பாண்டியன் இருந்தான். அவன் போர் செய்ய வேறு நாட்டின் மேல் படையெடுத்துச் சென்றான். அச் சமயம், குளிர் காலம் வந்துவிட்டது. கார் காலம், குளிர் காலம் ஆகிய இந்த இரண்டு பருவங்களிலும் குடும்பத் தலைவர் வீட்டை விட்டுப் பிரிந்திருக்கக் கூடாது என்பது தமிழ் மரபு. வியாபார நிமித்த மேனும் போரின் காரணமாகவேனும் வெளி நாடுகளுக்குச் செல்பவர்கள் கார் காலத் தொடக்கத்தில் வீடு திரும்பிவிட வேண்டும். பாண்டியன் குளிர் காலம் வந்தும் திரும்பினான் அல்லன். அவன் மனைவி அவன் திரும்பி வரவில்லையே என்று நைகின்றாள். போர்மேற் சென்ற பாண்டியனோ தன் கருமத்திலேயே கண்ணாயிருப்பதால் வீட்டின் நினைவு அவனைப் பாதிக்கவில்லை. நள் இரவிலும் அவன் தூங்காமல், வானம் தூறுதலையும் குளிரையும் பொருட்படுத்தாமல் பாசறையிலுள்ள கூடாரந்தோறும் சென்று புண்பட்ட வீரரைக் கண்டு நல்லன பேசி அவர்களுக்கு ஆறுதல் கூறும்

வேலையில் அமைந்திருக்கிறான். இந்த நிலையில் பாண்டிமா தேவியின் வருத்த நிலையைக் கண்ட பூசாரிப் பெண் ஒருத்தி போர்க் கடவுளாகிய துர்க்கையை, 'இந்த அரசியின் வருத்தம் தணியும் பொருட்டு மன்னனுக்கு விரைவில் வெற்றி கொடுத்து அவனை மீளச் செய்வாயாக' என்று வேண்டுகிறாள். இந்த வரலாற்றைக் கூறும் நூல் **நெடு நல்வாடை** எனப்படும். வாடை என்பது குளிர் காலம். தலைவிக்கு அது நீண்டு நெடுமை யாகத் தோன்றுகிறது. தலைவனுக்கோ நல்லதாக அமைகிறது. இந்த இரண்டு பண்புகளும் தோற்ற, இந்நூல் நெடு நல்வாடை என்ற பெயரைப் பெற்றது. பத்துப் பாடல்களில் நெடு நல்வாடை என்பது ஒன்று.

காவிரி நதிக்குக் கரையமைத்துச் சோழ நாட்டை வளப்படுத்திய கரிகாற் சோழன் சிறந்த வீரன். செம்மையாக ஆட்சி புரிந்து வந்த நீதி மான். அவன் தலைநகராகிய காவிரிப் பூம்பட்டி னம் அக் காலத்தில் சிறப்புற்றிருந்தது. ஒரு புல வருக்கு அம் மன்னனைப் பாட வேண்டும் என்ற விருப்பம் தோன்றியது. அவனது வீரத்தையும் நீதியையும் பட்டினத்தையும் ஒருங்கே புகழ எண்ணினார் புலவர். அதற்காக அவர் ஒரு கற் பனையைக் கற்பித்துக் கொண்டார். பொருள் தேடிவரும் பொருட்டு ஒரு தலைவன் தன் காதலி யைப் பிரிய நேரிடுகிறது. பிரிவினால் அவள் வருந்துவாளே என்று எண்ணி அவன் அவளுக்கு

ஆறுதல் கூறும் பொருட்டு, 'இல்லிலிருப்பது கரிகாலனது செங்கோலைப் போல் குளிர்ச்சியுடையது ; நான் செல்ல வேண்டிய வழியோ அவன் பகைவர்களுக்கு ஓச்சிய வேலினும் வெம்மையுடையது ; ஆகையால் காவிரிப் பூம்பட்டினத்தைப் போன்ற செல்வம் கிடைப்பதாயினும் நான் இவளைப் பிரிந்து செல்ல விரும்பேன்' என்று கூறுகிறான். இந்தக் கருத்தை விவரித்துச் சொல்லும் நூல் **பட்டினப்பாலை** எனப்படும். பிரிதலைத் தமிழர் பாலை என்பார்கள். காவிரிப்பூம்பட்டினத்தைச் சிறப்பித்துப் பாடிய பாலைப் பாட்டு பட்டினப் பாலை எனப்பட்டது. பத்துப் பாட்டுள் இதுவும் ஒன்று.

பத்துப் பாட்டில் இவ்விதம் பத்து நூல்களும் அழகாக அமைந்துள்ளன.

## எட்டுத் தொகை

தொகை நூல் என்பது பல புலவர்கள் பாடிய பாட்டுக்களின் கோவை. இங்ஙனம் திரட்டப் பெற்ற கோவைகள் எட்டு. அவை நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பன. இந்த எட்டும் எட்டுத் தொகை எனப்படும். இல்வாழ்க்கை நிகழ்ச்சிகள், வீரர், கற்புடை மகளிர், அரசர், தெய்வம், சில ஊர்கள், நதிகள் இவற்றின் நிலை முதலியவற்றை விளக்கும் தனித் தனிப் பாடல்களின் கூட்டமே

தொகை நூல் ஆகும். அந்தக் காலத்துச் சரித்திரத்தை அறிந்துகொள்ளத் தொகை நூல்களும் ஆதாரமாக உள்ளன.

## பதினெண் கீழ்க்கணக்கு

பதினெட்டு நூல்கள் இப்பெயரால் வழங்கப் பெறுகின்றன. இவற்றுள் சில நூல்கள் நீதிகளை விளக்குகின்றன. நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திருக்குறள், திரிகடுகம்,பழமொழி நானூறு, ஆசாரக் கோவை, சிறுபஞ்சமூலம், முதுமொழிக் காஞ்சி என்பன இப்பிரிவைச் சேர்ந்தன. மலை, காடு, நாடு, கடற்கரை என்ற இடம்பற்றி நிகழும் ஒழுக்கங்களை உணர்த்தும் சிறு நூல்களும் பதினெண் கீழ்க்கணக்கில் அடங்கும். ஓர் அரசன் போர் செய்த போர்க்களத்தின் சிறப்பைக் கூறும் **களவழி நாற்பது** என்ற நூலும் இதில் சேர்ந்திருக்கிறது.

சங்கப் புலவர்கள் உள்ளதை உள்ளபடி வருணிப்பதில் திறமை வாய்ந்தவர்கள். அவர்களுடைய பாடல்களில் இயற்கை வருணனை செறிந்திருக்கிறது.

பழங்காலத்தில் தமிழ் மகள் பெற்ற அரிய அணிகலன்கள் இவைகளே. இவைகளின் உயர்வும் பொருட்சுவை சொற்சுவையும் வெளிநாட்டவரும் பாராட்டக் கூடியவை. தமிழ் சிறப்புற்றிருந்த அந்த நாளில் எழுந்த இந்த 36 நூல்களைத்தான் நாம் சங்க நூல்கள் என்கிறோம்.

# 4. இலக்கியங்களும் மதமும்

## தமிழரின் வழிபாட்டு முறை

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க் கணக்கு என்ற சங்க நூல்களைப்பற்றியும் அவைகளுக்குக் காலத்தால் முற்பட்ட தொல்காப் பியத்தைப்பற்றியும் தெரிந்துகொண்டோம். இந்த நூல்களில் மத சம்பந்தமான செய்திகள் அதிகமாக இல்லை. தமிழ் மக்கள் அக்காலத்தில் வேறு பாடின்றிச் சிவபெருமான், திருமால், கண்ணன், பலதேவன், முருகன் முதலிய தெய்வங்களை வழி பட்டு வந்தனர். தமிழர் நிலத்தைக் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என ஐந்தாகப் பிரித்து இவைகளுக்கு முறையே முருகன், துர்க்கை, திரு மால், இந்திரன், வருணன் என்பாரைத் தெய்வ மாகக் கொண்டு ஒழுகி வந்தனர் என்பது ஒழிய மதங்களைப்பற்றியோ மதச் சண்டைகளைப் பற்றியோ சங்க நூல்களில் நாம் காணமுடியாது. நறும்புகையையும் பூவையும் கடவுளர்க்கு அர்ப் பணம் செய்தல், உருவங்கள் வைத்திருக்கும் இடத்தில் அலங்காரம் செய்து பலியிடுதல், மணி யடித்து வாத்தியங்களை முழக்குதல், கைகோத்துக் கூத்தாடுதல் போன்றவையே தமிழரின் வழி பாட்டு முறைகள்.

சங்க காலத்தின் முடிவில் தோன்றிய நூல்களிலிருந்தும் அவைகளுக்குப் பின் இயற்றப்பட்ட நூல்களிலிருந்தும் தமிழ் நாட்டில் மதங்களின் நிலையை நாம் தெளிவாக அறிந்துகொள்ளலாம்.

## சமயச் சார்புள்ள நூல்கள்

சிலப்பதிகாரம், மணிமேகலை என்பன சங்க காலத்திலேயே தோன்றின. ஆனால் அவை சங்க நூல்கள் எனப்படவில்லை. முன்னது கண்ணகி கோவலன் என்பாரின் கதையைக் கூறுவது; பின்னது கோவலனுக்கு மாதவி என்றவளிடம் பிறந்த மணிமேகலை என்ற பெண்ணின் சரிதையைக் கூறுவது. இந்த இரண்டு நூல்களும் எழுதப்பெற்ற காலம் ஒன்றே, அக்காலத்தில் தமிழ் நாட்டில் சமணர், பௌத்தர், சைவர் முதலிய மதத்தினர் இருந்தனர். அரசர்கள் எல்லா மதத்தினருக்கும் சமமான உரிமையை வழங்கி வந்தார்கள். பழைய தமிழ் மன்னரிடம் மதப் பகைமை இருக்கவில்லை. சிலப்பதிகாரத்தை எழுதிய இளங்கோவடிகள் சமணரோ சைவரோ என்று நாம் நினைக்கும்படி பல செய்திகளைச் சொல்லியிருக்கிறார். ஆனால் அவர் எழுத்தில் மதத் துவேஷம் காணப்படவில்லை. கூலவாணிகன் சாத்தனார் என்பவர் தம் மணிமேகலையுள் புத்தமதத்தை உயர்த்தி மற்ற மதங்களைத் தாழ்த்திக் கூறியுள்ளார்.

## இடைக்காலத்தில் ஏற்பட்ட மாறுதல்கள்

இவர் காலத்துக்குப் பின், அதாவது கி. பி. முதல் நூற்றுண்டு முதல் கி.பி.600 வரையில் தமிழ் மொழியில் என்ன என்ன நூல்கள் ஏற்பட்டன என்பது விளக்கமாகத் தெரியவில்லை. கி. பி. 600 முதல் 900 வரையில் தோன்றிய தமிழ் நூல்கள் எல்லாம் சமயச்சார்பு வாய்ந்தவைகளே. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயஞர் என்பவர்கள் தேவாரத்தையும், மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்தையும் சைவ சம்பந்தமாக எழுதிஞர்கள். கி. பி. 600-க்குச் சற்று முன்பிருந்தே கி. பி. 900 வரையில் ஆழ்வார்கள் வைணவ சம்பந்தமாகத் துதி கவிகளை எழுதிஞர்கள். இந்த இருதிறத்தாரும் சமணர்களையும் பௌத்தர்களையும் தம் நூல்களுள் தூற்றி எழுதிய பகுதிகளும் உண்டு. சைவர்கள் மிகவும் காரசாரமாக எழுதியிருக்கிறுர்கள். இந்த எழுத்திலிருந்து சமணரும் பௌத்தரும் அக்காலத்தில் தம் மத நிலைக்கு ஏற்ற ஒழுக்கத்தில் நில்லாமல் தவறிவிட்டதாகத் தெரிகிறது.

நாயன்மார்களும் ஆழ்வார்களும் இசைக் கவிகளை இயற்றி ஊர் ஊராகச் சென்று கோவில் வழிபாட்டையும் பக்தி மார்க்கத்தையும் தமிழ் நாட்டில் நிலைநாட்டினர். சமண மதமும் பௌத்த மதமும் இவர்களால் பெரிதும் மங்கிப்போயின.

## சமணர்களின் புதிய தொண்டு

சமணர்களுக்குத் தமிழ் நாட்டில் போதாத காலமாக இருந்தபோது சமண அறிஞர்கள் ஆடம்பரமான பிரசாரம் செய்ய முன்வரவில்லை. அவர்களுக்கு நாட்டில் வாய்ப்பும் இருக்கவில்லை. இக்காலத்தில் அவர்கள் மௌனமாகத் தமிழ் இலக்கிய இலக்கணத்துக்கு அரிய சேவை செய்து வந்தார்கள்.

உதயணன் சரித்திரத்தைக் கூறும் பெருங் கதை, சீவகன் சரிதையைக் கூறும் சீவக சிந்தாமணி, சூளாமணி என்பன சமணர்களால் எழுதப் பெற்ற சிறந்த தமிழ்க் காவியங்கள். பெரிய புராணம், கம்ப ராமாயணம் முதலிய அரிய காவியங்களுக்கு வழிகாட்டியாக இருப்பது சீவக சிந்தாமணிதான். மருந்தை இனிமையான பொருளில் கலந்து மறைத்துத் தருவதுபோல் சமணர்கள் தம் காவியங்களில் ஜைனக் கொள்கைகளைப் பொதிந்து அழகாக விளக்கியிருக்கிறார்கள்.

காவியங்களைத் தவிரச் சமணர்கள் இலக்கண நூல்களையும் எழுதினார்கள். யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, அகப்பொருள் விளக்கம், வெண்பாப் பாட்டியல் முதலியவை முக்கியமான இலக்கணங்கள். இந்த இலக்கணங்களுக்கு உரை எழுதியவரும் சமணரே. உரையில் உதாரணச் செய்யுட்களாக இவர்கள் தம் சமயக் கருத்துக்களை நுழைத்துவிட்டனர்.

## குறுகிய மதநோக்கும்

பிற்காலப் புலவர்கள் பலர் தம் நூல்களுள் பிற மத நிந்தையை அஞ்சாமல் புகுத்திவிட்டனர். பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் என்பவர் திருமால் விஷயமாக எட்டு நூல்களை எழுதினார். அவை அஷ்டப் பிரபந்தம் எனப்படும். இவைகளில் அவர் சிவனை இழிவுபடுத்தி எழுதியுள்ளார். அவரைப் பார்த்துச் சைவப் புலவர்களாகிய எல்லப்ப நாவலரும், குமர குருபர சுவாமிகளும் தங்கள் பிரபந்தங்களுள் திருமாலுக்கு நிந்தனை தோன்றும்படி பல கவிகளை எழுதியிருக்கிறார்கள்.

## இலக்கிய நோக்கு இன்றியமையாதது

பொதுவாக நோக்கும்போது ஒரு சில நூல்களைத் தவிர, சங்க காலத்துக்குப் பிற்பட்ட இலக்கிய நூல்களில் எல்லாம் சமயச் சார்பான கருத்துக்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. ஒருவர் கூறும் கருத்துக்கள் பிற மதத்தாருக்கு வருத்தம் தரக்கூடியவைகளாகவும் உள்ளன. மத சம்பந்தமான செய்திகள் மலிந்திருக்கும் காரணத்தினால் ஒரு மதத்தவரால் எழுதப் பெற்ற நூலை மற்ற மதத்தார் வெறுத்துப் படிக்காமல் இருக்கக்கூடாது. தமிழ் நூல் ஒன்றைப் பயில்பவர் மதக் கண் கொண்டு அதனை ஆராயக் கூடாது. இலக்கியக் கண் கொண்டுதான் பயில வேண்டும். சிவ நிந்தனையுள்ளதென்று சைவர்கள்

அஷ்டப் பிரபந்தத்தைத் தள்ளிவிட முடியாது; வைணவ நிந்தையோடு கூடியதென்று வைணவர்கள் குமர குருபரசுவாமிகளுடைய பிரபந்தங்களைப் படிக்காமல் இருத்தல் ஆகாது. சமண மத நூல்கள் என்று சிந்தாமணி, சூளாமணி முதலியவற்றை வைணவரும் சைவரும் நீத்துவிடக்கூடாது. பௌத்தமத நூலாகிய மணிமேகலையும் இலக்கிய அறிவை நாடுவோருக்கு விலக்காகாது. தமிழில் சிறந்த புலமை பெறவேண்டுமானால் ஒருவர் இத்தனை நூல்களையும் அவசியம் பயின்றுதான் தீரவேண்டும். தமிழ் இலக்கியங்களுக்கும் மதத்துக்கும் உள்ள தொடர்பு இலக்கிய வளர்ச்சிக்குத் தடையாக இருத்தலாகாது.

## மதங்களைப்பற்றிய சிறப்பு நூல்கள்

சைவ சித்தாந்தத்தைப்பற்றிச் சிவஞான போதம் முதலிய பதினான்கு நூல்கள் உள்ளன. அத்துவைதத்தைப் பற்றிக் கைவல்யம், நான ஜீவ வாதக் கட்டளை, வாசுதேவ மனனம் போன்ற பல நூல்கள் உள்ளன.

இவை எல்லாம் அந்த அந்தச் சமயத்தின் இலட்சணங்களைத் தெரிவிப்பன. இந்த வகையில் தோன்றிய நூல்கள் இலக்கிய வரிசையில் இடம் பெறமாட்டா. சமயநூல்கள் என்ற வரிசையில் இவை அடங்கும்.

---

# 5. பக்திப் பாடல்கள்

## பழங்கலைகள் குன்றியமை

தமிழ் நாட்டில் கி. பி. இரண்டாம் நூற்றுண்டிற்குப் பிறகு ஜைன மதம் மிகுதியாகப் பரவிவிட்டது. இது தமிழ் நாட்டுக்குப் புதிதாக வட நாட்டிலிருந்து வந்தது. ஜைனர்கள் இந்து வேதங்களை நம்பவில்லை. அவர்களால் நாட்டில் சைவமும் வைணவமும் குன்றிவிட்டன. ஜைனர்கள் துறவறத்துக்கே முதன்மை கொடுத்து வந்ததனால் நாட்டில் இசைக் கலையும் தமிழ் நாடகக் கலையும் குன்றிவிட்டன. தமிழ் வேந்தரும் ஜைன மதத்தைப் பின்பற்றி விட்டமையால் கலைகள் அழிந்துவிடும் நிலையில் இருந்தன.

## மறுமலர்ச்சி

ஆழ்வார்கள், நாயன்மார்கள் என்ற பெயர்களை முன் கட்டுரையில் நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். முன்னர் விஷ்ணு பக்தர்கள் திருமால் விஷயமாகப் பல பாடல்களை அருளிச் செய்திருக்கிறார்கள். நாயன்மார்களில் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனுர் என்பவர்கள் **தேவாரம்** என்ற பாடற் பதிகங்களைச் சிவபெருமான் விஷயமாகப் பாடியிருக்கிறார்கள்.

ஆழ்வார்களின் பாடல்கள் அனைத்தும் **நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்** என்ற புத்தகத்தில் அடங்கி யிருக்கின்றன. வடமொழி வேதத்துக்குள்ள மதிப்பை வைணவர்கள் இந்தப் பாசுரங்களுக் கும் கொடுத்து வருகிறார்கள். திருஞான சம்பந்தர் முதலிய மூவரின் பாடல்கள் தேவாரத் திருமுறை கள் எனப்படும். சைவர்களுக்கு 12 திருமுறைகள் உள்ளன. அவற்றில் தேவாரம் ஏழு திருமுறை களாகும்.

இந்தத் திவ்வியப் பிரபந்தமும் தேவாரத் திருமுறைகளும் பக்தி மார்க்கத்தைப் பெருக்கி, இசைக் கலையை வளர்த்து, நாட்டில் பெரும் மாறுதலை உண்டுபண்ணித் தமிழருடைய சமூக சரித்திரத்தையே மாற்றி யிருக்கின்றன. இந்த மாற்றத்தைக் கவனிப்போம்.

ஆழ்வார்களும் நாயன்மார்களும் ஊர் ஊரா கச் சென்று அங்கங்கே இருந்த கோயில்களில் இசைப்பாடல்களைப் பாடினார்கள். பாடல்களின் பொருளிலும் இசையிலும் கவர்ச்சி இருந்தது. ஆகவே, பொது மக்கள் இவர்களைப் பின்பற்றினார் கள். ஆலய வழிபாடும் பக்தி மார்க்கமும் நாட் டில் பரவலாயின. தமிழரசர்களும் இந்தப் பெரி யார்களின் இணையற்ற அறிவிலும் பக்தியிலும் ஈடுபட்டு நாடெங்கும் கோயில்களைச் சிறப்பாகக் கட்டத் தொடங்கினார்கள். ஒவ்வொரு கோயிலும் சிற்பம், ஓவியம், இசை, நாடகம், நாட்டியம் முதலிய கலைகளுக்கு இருப்பிடம் ஆயிற்று.

மற்றெரு விஷயம் இங்கே குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் ஆதிகாலத்தில் மத விஷயமான நூல்கள் வடமொழியிலேயே இருந்தன. பொது மக்களுக்கு அந்த மொழி விளங்காமல் இருந்தது. முதல் முதல் பௌத்தமதத்தினர் பொது மக்களைத் தம் வழியில் கொண்டுவரும் பொருட்டுத் தம் உபதேசங்களை நாட்டு மொழிகளில் பிரசாரம் செய்யலானர்கள். மக்கள் அதனல் புத்த மதத்தில் மிகுதியாக ஈடுபட்டார்கள். தமிழ் நாட்டில் ஆழ்வார்களும் தேவார ஆசிரியரும் இந்த முறையை மேற்கொண்டார்கள். பக்தி சம்பந்தமான விஷயங்கள் தமிழ் மொழியில் இசைப்பாடல்கள் வழியாக வெளி வந்தபின் பொதுமக்களுக்கு அந்த விஷயங்களில் கவர்ச்சி ஏற்பட்டது.

## கோயில் வழிபாடு

இந்தியாவின் மற்றப் பகுதிகளில் இருந்த மக்களைவிடத் தமிழர்தாம் முதல் முதல் உருவ வழிபாட்டை மேற்கொண்டனர். எப்பொழுது கொண்டனர் என்று திட்டமாக ஒன்றும் கூற முடியாது. மிகப் பழைய நூலாகிய தொல்காப்பியத்திலேயே உருவ வழிபாடு கூறப்படுகிறது. திருமுருகாற்றுப்படை என்ற நூலில் தமிழருடைய பல்வேறு விதமான பூஜை முறைகள் காணப்படுகின்றன. மணியடித்து, மலர்களைத் தூவி, தூபங்காட்டி, பலிகொடுத்துத் தமிழர் கடவுளை வழிபட்டு வந்த

னர். பூஜை முறைகள் தமிழ்நாட்டிலிருந்துதான் இந்தியாவெங்கும் பரவின.

தமிழர்களின் கோயில்கள் ஆடம்பரமின்றிச் செங்கல்லால் கட்டப்பட்ட சிறிய கட்டிடங்களே. மர நிழலில் அவை இருந்தன. ஆழ்வார்களும் நாயன்மார்களும் பக்திப் பிரசாரம் நடத்தத் தொடங்கிய பிறகு, தெய்வங்கள் உள்ள இந்தக் கோயில்கள் பெரியனவாகவும் சிறப்பாகவும் கட்டப்பட்டன என்றாலும் பல தலங்களுக்கு இன்றும் காடுகளின் பெயர் இருந்து வருகின்றன. மதுரைக்குக் கடம்ப வனம் என்றும், சிதம்பரத்துக்குத் தில்லை வனம் என்றும் வழங்குவதைக் காண்க. குற்றாலம், ஜம்புகேசுவரம், திருவாலங்காடு, திருப்பாதிரிப்புலியூர், திருநெல்வேலி, பழமுதிர்சோலை, கதலிவனம் முதலிய பெயர்களும் கோயில்கள் மரத்தடியில் இருந்தமைக்கு ஆதாரமாகும். பரம்பரையாகத் தமிழர் செய்து வந்த கோயில் வழிபாட்டைத்தான் நாயன்மாரும் ஆழ்வார்களும் பெருகச் செய்தார்கள்.

தேச சேவை செய்து தம் தேசத்தை முன்னுக்குக் கொண்டு வருவோரை அந்த நாட்டு மக்கள் மறப்பதில்லை. தெய்வம்போல் இல்லாவிட்டாலும் அதற்கு அடுத்தபடியாக வைத்து அவர்களை மக்கள் வழிபாடு செய்து வருவது இயல்பு. காந்தியடிகளை நாம் இன்று மகாத்மா என்று வழிபடுவது போலத்தான் இது. அடிகளின் சேவை

யையும் அவர் நமக்குக் காட்டியிருக்கிற வழியை யும் நாம் மறக்கமுடியாது. ஒரு புதிய யுகத்தை உண்டாக்கியவர் மகாத்மா காந்தி. நம் அடிகளைப் போல் அக்காலத்தில் ஆழ்வார்களும் நாயன்மார் களும் பணியாற்றி வந்ததனால் மக்கள் அவர்களைப் போற்றி வருவது இயல்பே அன்றோ! ஒவ்வோர் ஆழ்வாருக்கும் நாயனுருக்கும் திருநட்சத்திரம் உண்டு. அந்த நாளில் அவர்களுக்கு இன்றும் சில இடங்களில் விசேஷ பூஜை நடைபெறுகிறது.

## வேறு பக்தி நூல்கள்

தேவாரமும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்த மும் பக்திப் பாடல்கள் என்றோம். இவை தோன் றிய பிறகு வேறு பல அடியார்களால் தமிழில் பக்திப் பாடல்கள் தோன்றின. மாணிக்கவாசக சுவாமிகள் **திருவாசகம்** என்ற நூலை அருளிச் செய் தார். "திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத் துக்கும் உருகார்" என்பது ஒரு பழமொழி. இந் நூல் சைவ சம்பந்தமானது. இந்நூலுக்குப் பிறகு **பட்டினத்தார் பாடல், தாயுமானவர் பாடல்** முதலியன தோன்றின. இற்றைக்கு உத்தேசமாக அறுநூறு ஆண்டுகளுக்கு முன்பு அருணகிரி நாதர் என்பார் முருகன் விஷயமாகத் **திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி** என்ற நூல்களை அருளிச்செய்தார். சமீப காலத்தில் இராமலிங்க சுவாமிகள் **அருட் பா**வை அருளிச் செய்தார்.

பல புலவர்கள் கடவுளைப் பிள்ளையாகப் பாவித்தும், அவர் உலா வருவதாகக் கருதியும் பிறவாறு நினைத்தும் அவர்மேல் **பிள்ளைத் தமிழ், உலா, கலம்பகம், அந்தாதி, தூது, ஊசல்** முதலிய பக்தி நூல்களை எழுதினார்கள். இவ்விதம் சைவத்திலும் வைணவத்திலும் தோன்றிய நூல்கள் கணக்கில் அடங்கமாட்டா.

தமிழ் மொழி வரலாற்றில் பக்திப் பாடல்கள் தமிழ் நாட்டுக்கும் மொழிக்கும் செய்திருக்கிற சேவை இவ்வளவு அவ்வளவு அன்று.

## ஜைனரின் விழிப்பு

ஆழ்வார்களும் தேவார ஆசிரியரும் வைணவ சைவ மதப்பிரசாரத்தைத் தொடங்கி ஜைனரின் நடை முறையைப் பழிக்கத் தொடங்கிய பிறகு ஜைனர்கள் விழித்துக்கொண்டனர். அவர்களும் தமிழ்க் கலைகளை வளர்க்கத் தொடங்கி, சைவ வைணவர்கள் அதுகாறும் கண்டிராத இலக்கியக் கலைக்கு ஒரு புதிய ஒளியைக் கொடுத்திருக்கிறார்கள். காவிய இலக்கணங்கள் யாவும் அமையுமாறு தமிழில் முதல் காவியம் செய்தவர் ஜைனர்களே. பெருங்கதை, சீவக சிந்தாமணி, சூளாமணி முதலிய ஜைன காவியங்களில் பல கலைகள் பொதிந்திருக்கின்றன.

# 6. பிற்காலச் சமண நூல்கள்

## சமணரின் தமிழ்த்தொண்டு

சமண மதத்தினர் தமிழ் மொழிக்கு ஆற்றியுள்ள சேவை இவ்வளவு அவ்வளவு அன்று. சமண நூல்கள் பலவற்றைப் படிக்காதவர் தமிழிற் சிறந்த புலமை பெற முடியாது. ஜைனர் இயற்றிய நூல்களைப் பொதுவாக நீதி நூல்கள், காவியங்கள், இலக்கணங்கள் என மூன்றாகப் பிரிக்கலாம். இந்த மூன்று பிரிவுகளிலும் அடங்காத வேறு நூல்களும் உள என்றாலும் இவைதாம் முக்கியமானவை.

சங்க நூல்களாகிய எட்டுத் தொகையுள் சமணப் புலவர் பாடிய பல கவிகள் இருக்கின்றன. திருக்குறளை அருளிச் செய்த திருவள்ளுவரைச் சமணர் என்று கருதுவோர் பலர் இருக்கிறார்கள். சமணர் எழுதிய நீதி நூல்களுள் சிறந்தவை நாலடியாரும் பழமொழியும்.

## வீழ்ச்சியும் எழுச்சியும்

சங்க காலத்துக்குப் பின் சமணருக்குத் தமிழ் நாட்டில் போதாத காலம். ஆழ்வார்களும் தேவார ஆசிரியர்களாகிய நாயன்மார்களும் சமணர்களுக்கு எதிர்ப்பிரசாரம் செய்து இசைப் பாடல்களைப்

பாடியுள்ளமையை முன்னே அறிந்துகொண்டோம். சைவ வைணவர்களால் சமண மதத்தை முற்றும் அகற்ற இயலவில்லை. இவர்களுடைய பிரசாரம் சமணருக்குப் புதிய துறைகளில் சேவை செய்யும் வாய்ப்பை அளித்தது. பிற்காலத்துச் சமணரின் வாழ்வு தமிழோடு ஒன்றிய வாழ்வாகும்.

## சமண காவியங்கள்

பிற்காலத்து ஜைனருள் திருத்தக்க தேவர் என்பவர் **சிந்தாமணி** என்ற காவியம் ஒன்றை இயற்றினர். இந்நூலின் கதாநாயகன் ஜீவகன் என்பவன். இவன் எட்டுப் பெண்களை மணந்து கொண்டான். கதை பொருட்சுவை சொற்சுவையுள்ளது. தமிழிலே தோன்றிய முதற் காவியம்-வடமொழி இலக்கணத்தை ஒட்டி அமைந்த காவியம்-சிந்தாமணிதான். சம்ஸ்கிருதத்தில் வால்மீகி முனிவரே முதல் முதல் எல்லா வருணனைகளும் அமைய இராமாயணத்தை எழுதிக் காவியம் எழுதும் முறையை மற்றவர்களுக்குக் காட்டினர். வால்மீகியைப் போன்று திருத்தக்க தேவர் தமிழில் சிந்தாமணியை இயற்றித் தமிழ்ப் புலவருக்குக் காவிய அமைப்பை விளக்கினர். பெரிய புராணம், கம்ப ராமாயணம், நள வெண்பா, நைடதம், தல புராணங்கள் முதலியன சிந்தாமணியின் போக்கைப் பின்பற்றி எழுதப் பெற்றவை.

சிந்தாமணியைப் போன்று காவிய அமைப்பிற் சிறந்த நூல் 'பெருங் கதை' அல்லது 'உதயணன் சரித்திர'மாகும். இது ஆசிரியப் பாவினுல் ஆனது. இது சிந்தாமணிக்கும் காலத்தாற் சிறிது முற்பட்டதென்று அறிஞர் பலர் கருதுகிருர்கள். உதயணன் என்பவன் பல மனைவியரை மணந்த செய்தியை வருணிப்பது பெருங் கதை. எட்டுச் சுவைகளுக்கும் இருப்பிடமானது. இதுவும் ஜைன காவியமே.

**சூளாமணி** என்பது மற்ருெரு ஜைன காவியம். விஜய திவிட்டர்கள் என்ற சகோதரர் இருவருடைய கதையைக் கூறுவது இது. திவிட்டன் என்பவன் பல அரும்பெருஞ் செயல்களைச் செய்து கந்தர்வ லோகத்துப் பெண்ணொருத்தியை மணந்து கொண்டதாகக் கூறும் நூல் இது. இக்காவியம் எளிய நடையில் உள்ளது. பல சுவைகளோடு கூடியது.

பெரிய புராணம், கம்பராமாயணம் முதலிய காவியங்களில் எல்லாம் மேலே கூறிய சமண காவியங்களின் அமைப்பும் சொற்களும் கருத்துக்களும் ஆட்சி பெற்றிருக்கின்றன.

பிற்காலத்துச் சமண காவியங்களில் ஈற்றிலுள்ள பாகம் துறவைப்பற்றிக் கூறும். துறவின் மூலமே ஒருவர் முக்தியடைதல் கூடும் என்பது சமணரின் முக்கிய தருமம். இல்லறத்தினும் துறவறமே சிறந்தது என்பது அவர்கள் கொள்கை. **நாலடியார்** என்ற நூலிலும் துறவறமே முதலில்

கூறப்படுகிறது. பிற்காலச் சமணர்கள் உலக இன்பத்தைப் புகுத்திக் காவியங்கள் செய்தாரேனும் தம் மதத்தின் அடிப்படையான கொள்கைகளை விடவில்லை. நூல் நெடுக அவற்றை, சர்க்கரையில் மருந்தை மறைத்துத் தருவதுபோல், தந்திருக்கிறார்கள்.

## எளிய இலக்கணங்களின் தோற்றம்

பிற்காலச் சமணரின் புனிதமான மற்றொரு தொண்டு பல இலக்கண நூல்களை எழுதினமையே யாகும். தமிழ் இலக்கணங்கள் ஐந்து. அவை எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன. ஒரு சமண முனிவர் **நன்னூல்** என்ற இலக்கணம் எழுதினார். இது எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் விவரிப்பது. மற்றொரு சமணர் அகப்பொருளை எழுதினார். இந்நூல் **நம்பி அகப்பொருள்** அல்லது **அகப்பொருள் விளக்கம்** எனப்படும். வேறொரு சமண முனிவர் **யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை** என்ற இரண்டு யாப்பிலக்கண நூல்களை எழுதியிருக்கிறார். பிறிதொரு சமணர் **வெண்பாப் பாட்டியல்** என்ற இலக்கணத்தை எழுதினார். இது பிரபந்தங்களின் லட்சணம் முதலியவற்றைக் கூறுகிறது.

தொல்காப்பியமே பழைய இலக்கண நூலாயினும், சிறந்ததாக நீண்ட காலம்வரையில் கருதப்பட்டு வரினும், தமிழ் மொழியைப் பயில்கின்றவர் மேலே கூறிய நன்னூல், அகப்பொருள் விளக்கம்,

யாப்பருங்கலம், காரிகை, வெண்பாப் பாட்டியல் முதலியவைகளைப் பயிலாமல் இந்த மொழியில் புலமை பெற முடியாது. இந்த நூல்கள் அவ் வளவு அழகாக உள்ளன.

இந்த இலக்கண நூல்கள் தோன்றியபின் தொல்காப்பியப் பயிற்சி குன்றிவிட்டது. மேலும், சமணர்களே இந்நூல்களுக்கு முதல் முதலில் உரை எழுதத் தொடங்கினார்கள். சில உரையாசிரி யர்கள் தம் உரையில் ஜைன மதக் கருத்துக்க ளடங்கிய பல பாடல்களை உதாரணமாகக் காட்டி யிருக்கிறார்கள்.

## வடமொழிக் கலப்பு

சமணர்களால் தமிழ் மொழியில் வடமொழிக் கலப்பு அதிகமாக ஏற்பட்டது. வடமொழியி லுள்ள மத விஷயங்களைத் தமிழில் எடுத்துக் கூறு வதற்கு அவர்கள் மணிப் பிரவாளம் என்ற நடை யைக் கண்டறிந்தார்கள். இந்த நடையில் வட மொழிச் சொற்கள் நூற்றுக்கு எண்பதுக்கு மேல் இருக்கும். இந்த நடையையே வைணவ உரை யாசிரியரும் சிறந்ததென்று கருதி நாலாயிர திவ் வியப் பிரபந்தம் முதலியவற்றுக்கு உரை எழுதி யிருக்கிறார்கள்.

தமிழ் நாட்டிற் பிற்காலச் சமணரின் தொகை மிகக் குறைவாக இருந்தபோதிலும், அவர்கள் தமிழுக்கு ஆற்றியிருக்கும் சேவை பெரிதாக இருக் கிறது.

# 7. பொற்கால இலக்கியம்

## இடைக்காலச் சோழராட்சி—கோவில்கள்

அரசாட்சி ஓங்கி, நல்ல அரசின் காரணமாக நாடு பல வகைகளிலும் செழிப்புற்று மக்கள் மகிழ்ச்சியுடன் வாழும் காலத்தில் அந்த நாட்டில் கலைகள் பெருகி இலக்கிய வளர்ச்சி ஏற்படும். உலகத்திலுள்ள எல்லா நாடுகளுக்கும் இது பொருந்தும்.

கி. பி. 10-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து உத்தேசமாக 200 ஆண்டுகள், தமிழ்நாட்டில் இடைக்காலச் சோழர்களின் ஆட்சி செழிப்புற்றிருந்தது. நாட்டில் செல்வம் கொழித்து வந்த காலம் அது. அதனால் சரித்திரக்காரர்கள் அதனைப் **பொற்காலம்** (Golden age) என்பார்கள். அந்தக் காலத்தில், தமிழ்நாட்டில்—முக்கியமாகச் சோழ தேசத்தில்—கோவில்களும் சிற்பங்களும் அதிகமாகப் பெருகின. சோழ அரசரும், அரச குடும்பத்தினரும், உயர்தர அலுவலாளரும் கோவில்களைக் கட்டும் அறப்பணியில் கருத்தைச் செலுத்தினார்கள். தஞ்சாவூர், கங்கைகொண்ட சோழபுரம், திருவையாறு, சிதம்பரம், திருவாரூர் முதலிய இடங்கள் சிற்பக் களஞ்சியங்கள் ஆயின.

## இலக்கியப் பெருக்கம்

கோவில்களைப் போலவே தமிழ் இலக்கியங்களும் அந்தக் காலத்தில் பெருகின. செல்லுக்கு இரையாகி அழிந்து போகும் நிலையிலிருந்த **தேவாரத் திருமுறைகளை** முதல் ராஜராஜ சோழன் நம்பியாண்டார் நம்பி என்ற பெரியவரைக் கொண்டு செப்புத் தகடுகளில் எழுதுவித்தும் அவனும் அவன் பின் வந்தவர்களும் தேவாரப் பாராயணத்தைக் கோவில்களில் புகுத்தியும் சைவக்கலை சம்பந்தமாக அரிய சேவையைச் செய்தார்கள். **திருவிசைப்பா** என்ற நூலும் அந்தக் காலத்தில் தோன்றியதே.

**சேக்கிழார்** என்பவர் **பெரிய புராணம்** என்று வழங்கும் நூலை-63 நாயன்மாரின் சரித்திரத்தை—அருளிச் செய்தார். இவர் தொடக்கத்தில் சோழ வரசனின் மந்திரியாக இருந்து பிற்காலத்தில் அப்பதவியை நீத்துச் சிதம்பரத்தில் இருந்துகொண்டு பெரிய புராணத்தை எழுதினார். சோழவரசன் இவரையும் இவரது புராணத்தையும் யானையின் மீது ஏற்றித் தானே இவருக்குக் குடைபிடித்து ஊர்வலம் நடத்தி இவரைச் சிறப்பித்தான்.

முதற் குலோத்துங்கன் என்ற அரசன் காலத்தில், சோழ நாட்டுக்கும் கலிங்க தேசத்துக்கும் இடையில் பெரும்போர் எழுந்தது. அந்தப் போரில், குலோத்துங்கன் வெற்றி பெற்றான். அந்த வெற்றியைக் குறித்துச் சயங்கொண்டார் என்ற புலவர் **கலிங்கத்துப் பரணி** என்ற நூலை இயற்றினார். சொல்

நயம், பொருள்நயம் வாய்ந்து கற்போருக்கு மன வெழுச்சி தரும் நூல்களுள் கலிங்கத்துப் பரணி ஒன்று.

ஒட்டக்கூத்தர் என்ற புலவர் வாழ்ந்ததும் இந்தப் பொற்காலத்தில்தான். பிற்காலத்தில் எழுந்த கட்டுக் கதைகள் ஒட்டக்கூத்தரை வேறு விதமாகச் சித்திரித்திருக்கின்றனவேனும் இப் புலவர் பெருங்கவிஞரில் ஒருவராவர். நீண்ட காலம் உயிர் வாழ்ந்து சோழமன்னர் மூவரால் (விக்கிரம சோழன், இரண்டாங் குலோத்துங்கன், இரண்டாம் ராஜராஜன்) பெரிதும் போற்றப்பெற்று வந்தவர் ஒட்டக்கூத்தர். கவிச்சக்கரவர்த்தி, கவிராட்சசன் என்று பாராட்டப்பெற்றவர். இவர் **தக்கயாகப் பரணி, மூவருலா, குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ், குலோத்துங்கன் கோவை** முதலிய நூல்களை எழுதி யிருக்கிறார்.

**தண்டி அலங்காரம்** என்ற அணியிலக்கணத் தைப்பற்றிக் கூறும் இலக்கண நூலும் முதற் குலோத்துங்கன் காலத்தில் எழுந்ததே. இந் நூலில் காணப்படும் உதாரணச் செய்யுட்கள் பல, சரித்திர சம்பந்தமான நிகழ்ச்சிகளை அறிவிக்கின்றன. குலோத்துங்கன் செய்த கலிங்கப்போரைப்பற்றிச் சில செய்யுட்கள் கூறுகின்றன. ஒட்டக்கூத்தரின் வாக்கை ஒரு கவி புகழ்கின்றது. கங்கைகொண்ட சோழபுரத்து மாளிகையின் சிறப்பை ஒரு செய்யுள் தெரிவிக்கிறது. தமிழிலுள்ள அணியிலக்கணங் களுள் மிகச் சிறந்தது தண்டியலங்காரம்.

**யாப்பருங்கலக் காரிகை** என்ற, அரிய நூலும் முதற் குலோத்துங்கன் காலத்திலேயே ஏற்பட்டது. சமண நூல்களைப்பற்றிய கட்டுரையில் இந்நூலைப் பற்றிய செய்தி முன்னமே கூறப்பட்டது.

இடைக்காலச் சோழர் ஆட்சியின் பிற்பகுதியில் தோன்றிய நூல்களில் மிக மிகச் சிறந்தது **கம்பராமாயணம்**. கம்பர் இரண்டாம் இராஜராஜன் காலத்தில் இதனை இயற்றினர் என்று சரித்திரம் அறிந்த சிலர் கூறுகிறார்கள். கம்பராமாயணத்தின் பெருமையை இங்கே குறிப்பிட வேண்டாம்; யாவரும் அறிந்ததே அது.

## உரையாசிரியர்கள்

மேலே கூறிய நூலாசிரியர்களை அன்றி உரையாசிரியர் பலரும் இந்தக் காலத்திலேயே வாழ்ந்து வந்தார்கள். இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர், அடியார்க்குநல்லார், சேனாவரையர் முதலியவர்கள் தமிழிலுள்ள முக்கியமான நூல்களுக்கு உரை எழுதியவர்கள். இவர்களுடைய உரை இல்லையேல் அந்த நூல்களின் பெருமையை அவ்வளவாகத் தெரிந்து கொள்ள முடியாது.

இந்த உரையாசிரியருள் எவர் எவர் இடைக்காலச் சோழர் காலத்தவர் என்பதும் யார் யாரை எந்த எந்தச் சோழமன்னர் ஆதரித்தார் என்பதும் திட்டமாக நமக்குப் புலனாகவில்லை. இவர்களுடைய உரைகளிற் பெரிய புராணம், மூவருலா, தக்க

யாகப்பரணி, கம்பராமாயணம் போன்ற பெரிய நூல்களிலிருந்து மேற்கோள் காட்டப்படாத காரணத்தினுல் மேலே கூறிய நூல்கள் தோன்றும் காலத்துக்கு முன்பே இந்த உரையாசிரியர்கள் வாழ்ந்து வந்தனர் என்று ஊகிக்கலாம்.

## நாட்டின் நிலை

இன்னெரு விஷயம் இங்கே குறிப்பிடத்தக்கது. பெரிய புராணத்தில் ஒவ்வொரு நாயனுரின் சரித்திரத்தின் தொடக்கத்திலும் அவர் வாழ்ந்த ஊர்களின் வருணனை வருகின்றது. இந்த வருணனைகள் யாவும் சோழர்கள் காலத்தில் அந்த அந்த ஊர்கள் இருந்த நிலையையே குறிக்கின்றன. நாட்டில் கலையும், செல்வமும், அமைதியும், இன்பமும் எங்கும் குடிகொண்டிருந்தமையை இந்த வருணனைகளால் நாம் அறியலாம்.

கம்பர் தம் நாட்டுப் படலம் நகரப்படலங்களில் கோசல நாடு, அயோத்தி நகரங்களின் வருணனைகளைக் கூறியிருப்பினும் அவை உண்மையில் கம்பர் காலத்துச் சோழ நாட்டின் வருணனையென்றே நாம் கருதவேண்டும்.

நூல்களுக்கும் அவை தோன்றிய காலத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதைச் சோழர் காலத்துப் பொற்கால இலக்கியங்கள் தெளிவுபடுத்துகின்றன.

---

# 8. இருண்ட கால நூல்கள்

## நாட்டின் பிற்கால நிலை

இடைக்காலச் சோழர்களுக்குப் பிறகு தமிழ் நாட்டில் வல்லரசு ஒன்றும் ஏற்படவில்லை. அங்கங்கே இருந்த தலைவர்கள் சிறு சிறு பகுதிகளை ஆண்டுவந்தார்கள். சிறிது காலத்தில் விஜயநகரத்து நாயக்கர்களும் முஸ்லிம்களும் தமிழ் நாட்டிற் புகுந்து சில பகுதிகளில் அரசு செலுத்தலானார்கள். பொதுவாக எங்கும் கொலையும் களவும் கொள்ளையுமாகத் தமிழ்நாடு குழப்பத்தில் மூழ்கியிருந்தது. புலவர்களை ஆதரிக்கத் தக்க பேரரசு ஒன்றும் இல்லாததால் புலவர்கள் அங்கங்கே இருந்த சிறிய தலைவர்களை அண்டி அவர்களுடைய ஆதரவில் நூல்களை எழுதினார்கள். மன்னுவ நாட்டைச் சேர்ந்த சந்திரன்சுவர்க்கி என்ற மன்னனுடைய ஆதரவைப் பெற்றுப் புகழேந்திப் புலவர் **நள வெண்பா** என்ற அரிய நூலை (நளன் கதையை) எழுதினார். கொங்கர் குல வரபதி ஆட்கொண்டான் என்ற தலைவனது ஆதரவினால் வில்லிபுத்தூரார் என்பவர் **பாரதம்** இயற்றினார். சீயகங்கன் என்ற தலைவன் ஆதரவினால் பவணந்தி முனிவர் **நன்னூல்** என்ற அரிய தமிழ் இலக்கணத்தை அருளிச்செய்தார். இவை மிகச் சிறந்த நூல்கள்.

## புலவர்களின் பரிதாப நிலைமை

வேறு சில புலவர்கள் ஆதரிப்பார் இன்றிப் பிரபுக்களைத் தேடி ஊர் ஊராக அலைந்து திரிந்து அங்கங்கே சிலருடைய உதவி பெற்றுச் சிறு நூல்கள் பலவற்றை எழுதினர். இந்தச் சிறு நூல்கள் **பிரபந்தங்கள்** எனப்படும். இரட்டைப் புலவர், படிக்காசுப் புலவர், காளமேகம், பொய்யா மொழிப் புலவர் போன்றவர்கள் இந்த வர்க்கத்தில் அடங்குவர். இன்னும் பெயர் தெரியாத பல புலவர்கள் இவர்கள் கணக்கில் சேருவார்கள்.

'மூவேந் தருமற் றுச் சங்கமும் போய்ப்பதின் மூன்றொடிரு
கோவேந் தருமற் று மற்றொரு வேந்தன் கொடையுமற்றுப்
பாவேந்தர் காற்றில் இலவம் பஞ்சாய் பறக்கையிலே
தேவேந்த்ர தாருவொத் தாய்ரகு நாத செயதுங்கனே' (1)

'பூவேந்தர் முன்போற் புரப்பா ரிலையெனினும்
பாவேந்தர் உண்டென்னும் பான்மையால்' (2)

'ஈயாத புல்லர் இருந்தென்ன போயென்ன எட்டிமரம்
காயா திருந்தென்ன, காய்த்தும் பலனென்ன கைபரப்பிப்
போயா சகமென் றுரை போர்க்குச் செம்பொன் பிடிபிடியாய்
ஓயாம லீபவன் வேள்சீதக் காதி* ஒருவனுமே' (3)

'குன்றும் வழியும் குறுகி வழிநடப்ப
தென்று விடியும் எமக்கென்கோ—ஒன்றும்
கொடாதானைக் கோவென்றும் காவென்றும் கூறின்
இடாதோ நமக்கிவ் விடி' (4)

* சீதக்காதி என்பவர் இலப்பைகள் என்னும் தமிழ் முஸ்லிம் வகுப்பைச் சேர்ந்தவர்.

'இல்லாது சொன்னேனுக் கில்லையென்றான்
யானுமென்றன் குற்றத்தால் ஏகின்றேனே' (5)

வஞ்சகர்பால் நடந்தலைந்த காலிற் புண்ணும்
வாசல்தொறும் முட்டுண்ட தலையிற் புண்ணும்
செஞ்சொல்லை நினைந்துருகி நெஞ்சிற் புண்ணும்
தீருமென்றே சங்கரன்பாற் சேர்ந்தேன் அப்பா!' (6)

என்ற கவிகள் இக்காலத்தில் மேலே கூறிய வகுப்பினரால் பாடப்பெற்றவை. புலவர்களின் பரிதாபத்தை விளக்க இவை சான்றாக உள்ளன.

## கோவில்கள், மடங்கள் இவற்றின் தொண்டு

நிலையான பெரிய அரசாட்சி தமிழை ஆதரிப்பதற்கு இல்லாது போகவே கோவில்களும் திருவாவடுதுறை, தருமபுரம் முதலிய இடங்களில் நிறுவப்பெற்ற மடங்களும் தமிழையும் தமிழ்ப் புலவர்களையும் ஆதரிக்கும் பணியில் அமைந்தன. இந்த வழிகளில் ஆதரவு பெற்று வந்தவர்கள் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள், சிவப்பிரகாச சுவாமிகள், சிவஞான முனிவர் முதலியவர்கள் ஆவார்கள். இவர்களால் எழுதப்பெற்ற நூல்கள் தங்கள் மதத்தையும் பரம்பரையையும் புகழும் முகத்தால் வேறு மதங்களையும் பரம்பரையினரையும் சில இடங்களில் தூற்றியிருக்கின்றன. விசால நோக்கத்துக்கு வழியின்றி

இக்காலத்தில் குறுகிய நோக்கம் இலக்கியங்களில் மிகுதியாகப் புகுந்துவிட்டது.

## புதிய துறைகளிலே தமிழ்வளம்

கோவில்களைப்பற்றிய தலபுராணங்களும், உலா, கலம்பகம், பிள்ளைத்தமிழ், கோவை, அந்தாதி, தூது, குறவஞ்சி முதலிய பிரபந்தங்களும் இக்காலத்தில் பலபலவாகத் தோன்றின. நோக்கம் எங்ஙனமாயினும் இந்நூல்கள் எல்லாம் இலக்கியத் துறைக்கு ஆக்கம் செய்வனவே. எளிதிற் பொருள் விளங்காத யமகமும் திரிபும், நெருடான சொற்களும் இந்த நூல்களில் அதிகமாகப் புகுந்துவிட்டன. பிள்ளைப்பெருமாளையங்கார் அருளிச் செய்த அஷ்டப்பிரபந்தம், குமரகுருபர சுவாமிகளும் சிவப்பிரகாச சுவாமிகளும் அருளிச்செய்த பிரபந்தங்கள் முதலியன மிகச் சிறந்த இலக்கியங்களாம். இக்காலப் புராணங்களிற் பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணம் சிறந்த நூலாகும்.

இந்த இருண்ட காலத்திற் கோவில்கள், மடங்கள் முதலியவற்றின் ஆதரவில்லாமற் சுயேச்சையில் அதிவீரராம பாண்டியர் என்பவர் பல நூல்களை இயற்றினர். அவற்றுள் நைடதம் என்பது சிறந்தது.

இக்காலத்தே தோன்றிய பக்தி நூல்களில் முக்கியமானவை திருப்புகழ், தாயுமான சுவாமிகள் பாடல் முதலியனவாகும்.

காலம் இருண்டதாயினும், இருண்ட காலத்து நூல்களில் குறுகிய நோக்கம் கலந்திருந்தபோதிலும், தமிழ்வளம் என்னவோ மங்கவில்லை. பெரிய காவியம் ஒன்றும் தோன்றாவிட்டாலும் புதிய துறைகளில் தமிழ்மொழி இக்காலத்தில் வளர்ந்தே வந்தது. இக்கால நூல்களில் பல இன்னும் அச்சு வாகனம் ஏறாமற் கிடக்கின்றன, அவற்றை அச்சியற்றி வெளிப்படுத்துவது அவசியம்.

# 9. கலைகள்

## நுண் கலைகள்

சங்க நூல்களையும் அவற்றின் உரைகளையும் படிக்கும்போது அக்காலத்திலே தமிழ் நாட்டில் அரிய பல கலைகள் பெருகி இருந்தமை புலனாகும். இசை, நாடகம், நாட்டியம், ஓவியம், சிற்பம், புனைவு முதலியன நுண்கலைகள் எனப்படும். இவற்றுள் நாடகத்தையும் நாட்டியத்தையும் தமிழர் கூத்து என்று வழங்கிவந்தார்கள்.

தமிழர்களுடைய இசை வேறு; பிற்காலத்தில் வந்த கர்நாடக சங்கீதம் வேறு. இந்த இரண்டிலும் இசைகளின் பெயர் வேறு வேறாக இருக்கும். தமிழ் நூல்கள் இசையைப் பண் என்று கூறும். இசையைப் பேணுவதற்குப் **பாணர்கள்** என்று ஒரு வகுப்பார் தமிழ் நாட்டில் இருந்தனர். விறலியர் என்ற பெண்பாலாரும் கூத்தர், பொருநர் என்ற வகுப்பாரும் பாட்டையும் நாடக நாட்டியங்களையும் வளர்த்து வந்தார்கள். தோற்கருவி, தொளைக்கருவி, நரம்புக் கருவி, கஞ்சக் கருவி, மிடற்றுக் கருவி என இசை தோன்றும் கருவிகள் ஐந்து. இவற்றுள் மிடற்றுக் கருவி என்பது வாய்ப்பாட்டைப் பாடுதற்குரிய உறுப்பாகிய கண்டத்தை உணர்த்தும். இசைக் கருவிகளிற்

குழலும் யாழும் சிறந்தவை. யாழ் என்பது வீணை ; ஆயினும் வடநாட்டார் கொண்டுவந்த வீணைக்கும் யாழுக்கும் பேதமுண்டு, தமிழில் யாழைப்பற்றி அக்காலத்தில் ஒரு நூல் இருந்ததாகத் தெரிகிறது. யாழைப்பற்றியும் குழலைப் பற்றியும் அவற்றைச் செய்யும் விதங்களைப்பற்றியும் கற்பிக்கும் ஆசிரியர்களைப்பற்றியும் சிலப்பதிகாரம் என்ற நூலின் உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார் பல செய்திகளை எழுதியிருக்கிறார். இசை நூல்களும், கூத்து நூல்களும் பல அக்காலத்தில் இருந்தன என்பது அவருடைய உரையினால் தெரிகிறது.

இடைக்காலத்தில், தமிழ் இசையும் நாடகக் கலையும் மறைந்துவிட்டன. ஆனால் அக்காலத்தில் தேவாரம், திருவிசைப்பா, நாலாயிர திவ்வியப் பிரபந்தம் போன்ற நூல்கள் தமிழிசையை வளர்க்கத் தோன்றின. நாடகத் தமிழ் நூல்கள் மட்டும் தோன்றவில்லை. பிற்காலத்தில் நாடகம் நடிப்பதற்கேற்ற குறவஞ்சி, குளுவ நாடகம், பள்ளு, நொண்டி நாடகம் என்ற நூல்கள் தோன்றின. இராம நாடகக் கீர்த்தனை, நந்தனார் சரித்திரக் கீர்த்தனை, இராமாயண விலாசம், பாரத விலாசம் போன்ற இசை நூல்களும் நடிப்பதற்கேற்ற முறையில் தோன்றின. இவைகளினாலே தமிழ் நாட்டில் இசையும் நாடகக் கலையும் வேறு வடிவில் வளர்ச்சியுற்றன. இவற்றின் பின் இன்று வரையில் பல கீர்த்தனங்களும் நாடக நூல்களும் தோன்றியிருக்கின்றன.

ஓவியம், சிற்பம் இரண்டும் தமிழ்ப் பண்பாட்டின் இரு கண்கள். ஓவிய நூல் என்ற ஒன்று முன் காலத்தில் இருந்ததாம். சிற்பத்தைப்பற்றியும் பல நூல்கள் இருந்தன என்பதற்கு ஆதாரங்கள் உண்டு. இக்காலத்தில் அவைகள் கிடைக்கவில்லை. ஆனால் தமிழ் இலக்கியங்களில் அங்கங்கே வரும் வருணனைகளினால் தமிழரின் ஓவியச் சிற்பக் கலையின் பெருமை விளங்குதல் கூடும்.

இரத்தினப் பரீட்சை, பெண்கள் அலங்காரம் செய்துகொள்ளும் முறைகள், விளையாட்டுக் கலைகள் இவைகளைப்பற்றித் தனி நூல்கள் இக்காலத்தில் கிடைப்பது அரிதாயினும் இலக்கியங்களில் அங்கங்கே இவற்றைப்பற்றிய செய்திகளைக் காணலாம்.

## சித்த வைத்தியம்

தமிழருடைய மருத்துவ முறை சித்த வைத்தியம் எனப்படும். சித்தர்களால் கண்டறியப்பட்ட வைத்தியம் என்பது இதன் பொருள். பொன், வெள்ளி, ஈயம், செம்பு முதலிய உலோகங்களையும் முத்து, பவளம் முதலியவற்றையும் பஸ்மங்களாகவும் செந்தூரங்களாகவும் செய்து மருந்தாக உபயோகிப்பதே சித்த வைத்தியத்தின் முக்கியமான நோக்கமாகும். மூலிகைகளைக் கொண்டு மருந்து செய்யும் முறையும் சித்த வைத்தியத்தின் ஒரு பகுதியே. இக்காலத்தில் சித்த வைத்தியத்துக்கும்

ஆரிய மருத்துவ முறையாகிய ஆயுர்வேதத்துக்கும் உலோக வகையான மருந்துகள் சம்பந்தமாக அல்லாமல் மற்ற வகைகளில் வேறுபாடு அதிகம் இல்லை.

தமிழ் நாட்டில் சித்த வைத்தியத்தைப்பற்றிய நூல்கள் பல பலவாக உள்ளன. ஆயுர்வேத வைத்திய முறையில் எழுதப்பெற்ற நூல்களும் பல. இவைகளுள் ஒரு சில அச்சேறி வெளிவந்து உலவுகின்றன

### சோதிட நூல்கள்

தமிழிலே சோதிட நூல்கள் பலபலவாக இருக்கின்றன. கடைச் சங்க காலத்திலேயே தமிழ்ப் புலவர்களிற் பலர் சோதிடத்தில் வல்லவ ராக இருந்தனர். **கணியன் பூங்குன்றன், கணிமேதாவி யார்** போன்ற புலவரின் பெயர்கள் அப்பெயரை யுடைய புலவர்கள் சோதிடத்திலும் புலமை வாய்ந்தவர்களாக இருந்தமையைக் காட்டும். எழு பது ஆண்டுகளுக்கு முன் திண்ணைப் பள்ளிக் கூடங்களிலும் கிராமங்களில் உள்ள குடும்பங்களி லும் சோதிட அரிச்சுவடி, வருஷாதி நூல் போன்ற சோதிட நூல்கள் பயிலப்பட்டு வந்தன.

### கலை சம்பந்தமான நூல்களின் ஆசிரியர்கள்

சோதிடம், மருத்துவம் என்ற கலைகளைப் பற்றிய நூல்களிற் பெரும்பாலானவை • செய்யுள்

நடையில் உள்ளன. இந்த நூல்களின் செய்யுள் நடை பிற்காலத்தது என்று தமிழ் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். அகத்திய முனிவர், தேரையர் போன்ற பழங்கால ஆசிரியர்கள் இந்த நூல்களை எழுதினார்கள் என்று அந்த அந்த நூல்கள் கூறுகின்றன. பழங்கால ஆசிரியர் இயற்றியிருந்தால் இவற்றின் நடை பழைய முறையில் அமைந்திருக்க வேண்டும் அல்லவா! மேலே கூறிய இரண்டு வகை அபிப்பிராயங்களில் உண்மை எது என்பது ஆராயத் தக்கது.

அகத்தியர், தேரையர் முதலியவர்களின் வழி வழியே வந்த மாணவர்களில் எவரோ ஒருவர் தாம் தம் ஆசிரியரிடம் பாடம் கேட்ட விஷயங்களைத் தம் காலத்துச் செய்யுள் நடையில் எழுதியிருத்தல் கூடும். விஷயம் தம்முடையது அன்று என்ற காரணத்தினால் அவர் தாம் எழுதிய நூலில், அகத்தியர் முதலியவர்களில் மூலபுருஷர் ஒருவரை அதன் ஆசிரியராகக் குறித்து வைத்திருக்கலாம். தற்கால ஆராய்ச்சியாளர் இப்படித்தான் எண்ணுகிறார்கள்.

தமிழ்க் கலைகளைப்பற்றிய நூல்களும் இலக்கியங்களிற் கலைகளைப்பற்றிக் கூறும் நூற்பகுதிகளும் தமிழ் மொழியின் அரிய செல்வங்கள் என்பதில் ஐயமில்லை.

# 10. தமிழ்ப் புலவர்கள்

### பெயர்கள்

தமிழின் பெருமையை நன்கு உணர்ந்து கொள்ள வேண்டுமானால் தமிழ்ப் புலவரைப் பற்றி நாம் அறிந்தாகவேண்டும். தமிழ்ப் புலவர்களை அவர்கள் வாழ்ந்த காலத்தை ஒட்டிச் சங்ககாலப் புலவர், இடைக்காலப் புலவர், பிற்காலப் புலவர் என மூன்று வகையினராகப் பிரிக்கலாம். இவர்களுள் பிற்காலப் புலவர்களின் இயற்பெயர்கள் நமக்கு விளக்கமாகத் தெரிய வருகின்றன; மற்ற இரு வகையினரிற் பலருடைய இயற்பெயர்கள் இன்னவை என்று தெரியவில்லை. இளவேட்டனார், உறையூர் இளம்பொன் வாணிகனார், கணக்காயனார், அணிலாடு முன்றிலார், ஓரிற் பிச்சையார், ஓரேர் உழவர், குப்பைக் கோழியார் என்னும் சங்ககாலத்தவரின் பெயர்கள் காரணத்தால் அமைந்தனவாகும். இடைக்காலப் புலவரின் பெயர்களிற் சேக்கிழார், கம்பர், புகழேந்தி, பொய்யாமொழியார் முதலியன இயற்பெயர்கள் அல்ல.

சங்ககாலப் பெயர்களிற் சில அந்த அந்தப் பெயரையுடைய புலவர் பாடிய பாட்டிலுள்ள அரிய தொடராலும் வருணனையாலும் வந்தன

வாகும். அந்த வருணனைகளின் சிறப்பு நோக்கி அக்காலத்தில் இருந்த மக்கள் இவ்விதம் பெயரிட்டு அழைத்தனர் போலும். இல்லையேல் இயற்பெயர் அறிய முடியாத புலவருக்கு அவர்தம் பாட்டின் தொடர்களைக் கொண்டு பெயர் ஏற்பட்டன போலும். இவ்வகைப் பெயர்களுக்குக் குறுந்தொகை என்ற நூலிலிருந்து சில உதாரணங்களைப் பார்ப்போம் : 1. செம்புலப் பெயல் நீரார், 2. மீனெறி தூண்டிலார், 3. ஓரேருழவர், 4. ஓரிற் பிச்சையார், 5. குப்பைக் கோழியார் என்ற பெயர்கள் முறையே.

1. செம்புலப்[1] பெயல்நீர்[2] போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே' (40)

2. 'கான யானை கைவிடு பசுங்கழை[3]
மீனெறி தூண்டிலின் நிவக்கும்'[4] (54)

3. 'ஈரம் பட்ட செவ்விப் பைம்புனத்(து)
ஓரே ருழவன் போலப்
பெருவிதுப் புற்றன்றால்'[5] (131)

4. 'ஆசில் தெருவில் நாயில் வியன்கடைச்
செந்நெல் அமலை[6] வெண்மை வெள்ளிழு(து)[7]
ஓரிற் பிச்சை ஆர மாந்தி' (277)

1. செம்புலம் - செம்மண்நிலம். 2. பெயல்நீர் - மழை நீர். 3. கழை - மூங்கில். 4. நிவக்கும் - மேலே செல்லும். 5. பெருவிதுப்பு உற்றன்று - பெரிய விரைவை அடைந்தது. 6. அமலை - சோற்று உருண்டை. 7. வெள்ளிழுது - வெள்ளிய நெய்.

5. 'உய்த்தனர் விடாஅர் பிரித்திடை களையார்
குப்பைக் கோழித் தனிப்போர் போல
விளிவாங்கு [1]விளியி னல்லது (305)

என்று அவரவர் வருணித்திருக்கும் அடிகளிற் கண்ட தொடர்களால் வந்தவை.

சங்ககாலப் புலவரிற் பலருக்கு அவர்கள் கற்ற கல்வியின் பெருமை காரணமாக ந என்ற பட்டம் அரசர்களால் வழங்கப்பட்டதென்று தெரிகிறது. நக்கண்ணன், நக்கண்ணையார், நக்கீரர், நச்செள்ளையார், நத்தத்தனார், நப்பண்ணனார், நப்பாலத்தனார், நப்பூதனார் முதலியவை இந்த வகையில் வந்தவை. இவற்றுள் சில பெண்பாலார்க்குரியவை.

பல புலவர்களுக்கு அவர்கள் சிறப்புற்றிருந்த துறைகளின் தொடர்பானவற்றை அடையாகக் கொடுத்துப் பெயர்கள் வழங்கியதுண்டு. கோடை பாடிய பெரும்பூதனார், பாலைக் கௌதமனார், பாலை பாடிய பெருங்கடுங்கோ, புறத்திணை நன்னாகனார், மடல் பாடிய மாதங்கீரனார், மருதம் பாடிய நெடுங்கோ, வெறிபாடிய காமக் கண்ணியார் முதலியன இந்த வகையைச் சேர்ந்தன.

இடைக்காலப் புலவரின் பெயர்களில், தோலாமொழித் தேவர், நாற்கவிராச நம்பி போன்றனவும் ஒவ்வொரு துறையில் அவர் பெற்றிருந்த புலமையின் காரணமாக வந்த பெயர்களாக இருக்கின்றன.

1. விளிதல் - சாதல்.

## புலவர் முடி பெறுதல்

புலமையிற் சிறப்புற்று விளங்கிய சில அறிஞர் கட்கு அக்கால மன்னர்கள் தம்மைப்போல் பொன் முடியை (கிரீடத்தை) அணியும் சிறப்பை வழங்கி வந்தமை வில்லி பாரதத்தின் சிறப்புப் பாயிரத்தால் தெரிகிறது.

உத்தேசமாக ஐந்நூறு ஆண்டுகட்கு முன் வாழ்ந்த கொங்கர்குல வரபதி ஆட்கொண்டான் என்ற தலைவன் காலத்தவரான வில்லிபுத்தூரர் முடியையும் வேறு பல விருதுகளையும் பெற்றுப் பல புலவர்களுக்கு அதிபதியாக விளங்கினர் என்று அப்பாயிரம் கூறும்.

'ஐந்து பாவுடை நால்வகைக்
கவிக்கதி பதியாய்
வந்து வட்டமா மணியின்நன்
மணிமுடி புனைந்து' [1]

'தென்னர் கோரளர் செம்பியர்
எனப்பெயர் சிறந்த
மன்னர் மூவரும் வழங்கிய
வரிசையால் உயர்ந்தோன்'

---

1. ஐந்து பா - வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா. நால்வகைக் கவிக்கு - நான்கு விதமான கவிகளில் வல்ல புலவர்களுக்கு; கவி - புலவர். நால்வகைக் கவிகளாவன : ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்பன.

என்று அப்பாயிரத்திற் காணப்படுகின்றன. சங்க காலப் புலவர்களில் முரஞ்சியூர் முடிநாகராயர் என்பவரும் பொன்முடியார் என்பவரும் வேந்தர் களால் திருமுடி வழங்கப் பெற்றவர்கள் போலும்.

## சாதி, குலம் புலமைக்குத் தடையாக இல்லை

பல சாதியினர், பல மதத்தினர், பல வேறு தொழில்களை ஆற்றிவந்தவர்கள், ஆண்மக்கள், பெண்பாலார் உள்ளிட்ட பலவகையினர் புலமை செலுத்தி வந்தார்கள். அக்கால வேந்தர்கள் புல வரின் சாதி, மதம், தொழில் முதலியவற்றை நோக்காது அவர்களுக்கு ஏற்ற மரியாதைகளை வழங்கி அவர்களுடைய அறிவுரைகளைத் தலைமேற் கொண்டு ஒழுகிவந்தார்கள்.

## அரசர்களை அறநெறியில் நிறுத்தல்

அரசர்கள் பொரும் போர்களால் நாட்டின் நலத்துக்கோ நல்லோரின் உயிருக்கோ தீங்கு விளை யத் தக்க சமயங்களில் சில புலவர்கள் அப்போர்க ளுக்குக் காரண கர்த்தர்களாக இருந்த மன்னர் களைத் தெருட்டி நல்வழிப்படுத்தி யிருக்கின்றனர். குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் என்பவன் பல போர்களில் ஈடுபட்டிருந்தான். அப்போர்களின் காரணமாகச் சோழநாடு வளங்குன்றி வறுமை யுற்றது. அப்பொழுது வெள்ளைக்குடி நாகனார் என்ற புலவர் அவனை அணுகிப் போர்த் தொழிலை ஒழித்து நாட்டின் வேளாண்மையைப் பாதுகாப்

பதில் கருத்தைச் செலுத்துமாறு அறிவுறுத்தினர். பாரி என்ற கொடையாளியின் பறம்பு மலையைத் தமிழ்நாட்டு மூவேந்தரும் வலிய வந்து முற்றுகை செய்த காலத்திற் கபிலர் என்ற புலவர் பெருமான் பறம்பு மலையை அவ்வேந்தர்கள் எளிதிற் கொள்ள முடியாமைக்குரிய காரணங்களை அறிவித்து அவர்களின் போரை விலக்கியுள்ளார். காவிரிப் பூம்பட்டினத்தையும் உறையூரையும் தனித் தனியே ஆண்டு வந்த தாயாதிகளாகிய இரு சோழ மன்னர்கள் தம்முள் பகைமை கொண்டு ஒழுகி வந்ததனைத் தடுத்து அவ்விருவருக்கும் சமா தானம் ஏற்படுமாறு ஒரு புலவர் அறிவுரை கொளுத்தினர்.

அரசியல் நெறி தவறி நடக்க முயன்ற வேந் தர்களைச் சில புலவர்கள் இன்சொற்களாற் கண் டித்து அவர்களை நன்னெறியில் நிறுத்தியுள்ளார் கள். மலையமான் என்ற பெருவீரன் இறந்தபின் அவனுடைய இளங்குழந்தைகளைக் கிள்ளிவளவன் என்ற சோழன் யானையின் காலால் மிதிப்பித்துக் கொல்ல எண்ணுகையிலே கோவூர் கிழார் என்ற பெரும் புலவர் அவனது மறச்செயலை விலக்கி அநாதைகளான அக்குழந்தைகளின் உயிரைக் காப்பாற்றினர். புகாரை ஆண்ட நலங்கிள்ளி யிடத்திலிருந்து உறையூருக்கு வந்த இளந்தத்தன் என்னும் புலவனை ஒற்று வந்தான் என்று நெடுங் கிள்ளி கொல்லத் தொடங்கிய காலத்து அப்புல

வனை உய்வித்தற் பொருட்டுப் பொதுவாகப் புல வர்களின் இயல்பை எடுத்துக்காட்டிக் கோவூர் கிழார் அம்மன்னனை நல்வழிப்படுத்தினர். இவை சில உதாரணங்களே.

அரசியற் காரியங்களில் மன்னர்களுக்கு அவ சியமான யோசனைகளைக் கூறி அவர்களுக்கு உற்ற துணையாகச் சில புலவர்கள் இருந்தார்கள்.

## புலவரின் நன்றியறிவு

முடியுடை அரசரும் குறுநில மன்னரும் தங் கள்மீது காட்டிவந்த அன்பின் காரணமாகச் சில புலவர்கள் அந்த அரசரோ குறுநில மன்னரோ இறந்தபோது அவர்களுடன் தாமும் இறந்துபட் டுத் தம் நன்றியைக் காட்டியிருக்கிறார்கள். பாரி இறந்தமை கேட்டுக் கபிலர் வடக்கிருந்து உயிர் துறந்தார். கோப்பெருஞ் சோழன் உயிர் நீத்தபோது பிசிராந்தையார் என்ற புலவரும் பொத்தியார் என் பாரும் தம்முயிர் விட்டனர். சீனக்கன் என்ற தலை வன் இறந்த சமயம் பொய்யாமொழிப் புலவர் என்ப வர் அவனுடன் சிதையில் ஏறி உயிர் துறந்தார் என்று ஒரு செய்தி காணப்படுகிறது.

பல புலவர்கள் தம்மை ஆதரித்தவர்கள்மீது நூல்கள் இயற்றியுள்ளார்கள். வேறு சில புலவர் கள் தம்மை ஆதரித்த வள்ளல்களையும் அவர் களுடைய செயல்களையும் தம் நூல்களில் வைத் துத் தம் நன்றியைத் தெரிவித்திருக்கிறார்கள். அத்

தகையோரில் கம்பர், புகழேந்தி, வில்லிபுத்தூரர் முதலியவர்கள் இங்கே முக்கியமாகக் குறிப்பிடத் தக்கவர்கள்.

## புலவரின் புகழ்மாலை

புலவர்கள் தம்மைப் புகழ்ந்து பாடுவதை அக்கால மன்னர்களும் பிரபுக்களும் பெருஞ் செல்வமாகக் கருதிவந்தார்கள்.

'புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவன் ஏவா வான ஊர்தி
எய்துப என்ப'

புறநானூறு, (27)

'பாடல் பெருனே பலர்நச்ச வாழானே
நாடறிய நன்மணங்கள் நாடானே—சேடன்
இவன்வாழும் வாழ்க்கை இருங்கடல்சூழ் பாரில்
கவிழ்ந்தென் மலர்ந்தென்ன காண்'

—தனிப்பாடல்

என்பனவற்றால் இச்செய்தி தெரியவருகிறது. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன் என்ற பாண்டியன் இளைஞனாக இருக்கையில் இவன்மீது அழுக்காறுற்றுச் சோழனும் சேரனும் வேறு குறுநில மன்னர் ஐவரும் போருக்கு வந்த சமயம் நெடுஞ்செழியன், 'நான் இவர்களை வெல்வது உறுதி' என்று வஞ்சினங் கூறுகிறான். அச் சமயம் இவன், தான் வெல்லாவிடில் இங்ஙன மெல்லாம் ஆகுக என்று சொல்லுமிடத்தில்,

மாங்குடி மருதன் தலைவனாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை'

—புறநானூறு, (72)

என்று குறிக்கிறான். புலவர் சூட்டும் புகழ்மாலையின் சிறப்பு இந்த வரலாற்றாலும் தெரிகிறது.

புலவர்கள் வறுமையின் காரணமாகச் சில சமயம் வாடினார்கள் எனினும், அமைதியுடனும் மனநிறைவுடனும் மகிழ்ச்சியுடனும் வாழ்ந்து வந்தார்கள். மகிழ்ச்சியையும் மன்னர்களின் ஆதரவையும் அவர்கள் பெற்று வந்த காரணத்தால் தான் அவ்வப்போது நாட்டில் அவர்களாற் பல நூல்கள் தோன்றின.

# 11. ஐயப்பாடுள்ள கதைகள்

தமிழைப் பற்றியோ தமிழ்ப் புலவரைப் பற்றியோ வழங்கும் சில செய்திகள் ஐயந் தருவனவாக உள்ளன. ஆதாரங்கள் சரிவரக் கிடைக்காததே இந்த ஐயப்பாட்டுக்குக் காரணம். புலவரின் வரலாறுகளை அறிந்துகொள்ள ஆதாரமாயுள்ளவற்றுள், சங்க நூல்களும் பிற்கால நூல்களும் அவற்றின் உரைகளும் முதற் காரணமாகும். கர்ண பரம்பரையாக வழங்கி வரும் வரலாறுகள் இரண்டாம் காரணமாகும். கர்ண பரம்பரைச் செய்திகள் அவ்வளவாக நம்பத் தகுந்தவையாகக் கருதப்பட மாட்டா. சாதி மத பேதம் மலிந்த நாட்டில் சிலர் தத்தம் சாதியையோ மதத்தையோ சேர்ந்த புலவரை உயர்த்தியும் அவர்களோடு தொடர்புபடுத்தி வேறு சிலரைத் தாழ்த்தியும் புனைந்துரைத்த கட்டுக் கதைகள் பல கர்ண பரம்பரையாக இங்கே வழங்கி வருகின்றன. தம்மைச் சார்ந்தவரிற் சிலர் மனித சக்தியை மீறிப் பல அற்புதங்களை நிகழ்த்தியதாக அந்த அந்தச் சாதியார்-மதத்தார்-கூறும் செய்திகளிற் சிலவும் அப்படியே கட்டுக் கதைகளோ என்று எண்ணுமாறு அமைந்துள்ளன. இந்தக் கதைகளைச் சாதாரண மக்கள் நம்பும்படியான தனிப் பாடல்கள்

பலவும் வழங்கி வருகின்றன. இத்தகைய பாடல்களை அந்த அந்தப் புலவரே எழுதினரோ. இல்லையேல், அவர்மீது அபிமானமுள்ள பிறர் எழுதினரோ, தெரியவில்லை.

தமிழ்ப் புலவரின் சரிதத்தைத் தெரிந்துகொள்வதற்குப் **புலவர் புராணம்** என்ற ஒரு நூல் உள்ளது. **தமிழ் நாவலர் சரிதை** என்ற தனிப் பாடற்றிரட்டு ஒன்றும் உள்ளது. இவைகளையும் வேறு தனிக் கவிகளையும் ஆதாரமாகக் கொண்டு கி. பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வீராசாமி செட்டியார் என்பவர் **விநோதரச மஞ்சரி** என்று எழுதிய புலவர் வரலாறுகளைக் கூறும் புத்தகம் ஒன்றும் இருக்கிறது. இந்த மூன்றைத் தவிர எவரோ தொகுத்து வைத்த தனிப் பாடற்றிரட்டு என்ற நூல் ஒன்றும் புலவர் வரலாற்றைக் குறிக்கின்றது. இவைகள் கூறும் செய்திகளிற் பல, அந்த அந்தப் புலவர் வாழ்ந்த காலத்தை நோக்கும்போது, சரியல்ல வென்று தோன்றும்.

வேறு வேறு காலத்தில் வாழ்ந்த ஒட்டக்கூத்தரையும் புகழேந்திப் புலவரையும் ஒரு காலத்தவராக்கி, அவ்விருவருக்குள் கலாம் விளைந்ததாகப் புனைந்து கூறும் கதைகள் பல சுவையுள்ளனவாக இருப்பினும், சரித்திரக் கண்கொண்டு நோக்குவார்க்கு இவை உடன்பாடுள்ளவை அல்ல. ஔவையார் கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பரை நிந்தித்துப் பாடியனவாகச் சில தனிப்பாடல்கள்

காணப்படுகின்றன. ஔவையார் என்ற பெயரை யுடைய புலவர் ஒருவருக்குமேல் இருந்தனர் என்பர். இவருள் கம்பரை இகழ்ந்துள்ளவர் எவரோ? ஔவையார் அபிமானிகளில் ஒருவர் முன்காலத்தில் எழுதிய தனிப் பாடல்களிலிருந்து இந்த இகழ்ச்சிக் கதை தோன்றியதாகவும் இருத்தல் கூடும். நாம் திட்டமாக இன்று ஒன்றும் சொல்லுவதற்கில்லை.

வில்லிபுத்தூரர் தம் பாரத நூலை எழுதியதற்குப் பலர் பல காரணங்களைக் கூறுவர். இவற்றுள் ஒன்றைத் தவிர மற்றையவை வெறும் புனைந்துரையாக இருத்தல் வேண்டும் அல்லவா? இவற்றின் உண்மை அன்மைகளை இன்று நாம் எப்படி அறிந்துகொள்வது?

சிறப்பில்லாத போலிப் புலவர் இருவர் குடுமிகளை ஒன்றாக முடித்து அவர்கள் தலைகளை ஒட்டக்கூத்தர் ஒரே வெட்டில் வெட்டி வீழ்த்தினாராம்! வில்லிபுத்தூரர் போலிப் புலவரின் காதுகளை அறுத்து அவமானப் படுத்தினாராம்! பிள்ளைப் பாண்டியன் என்ற அதிவீரராம பாண்டியன் போலிக் கவிஞரைக் குட்டிச் சிறைவைத்தானாம்! இவைகளுக்கு ஆதாரமாக,

‘குட்டுதற்கோ பிள்ளைப்பாண் டியன்இங் கில்லை
குறும்பி அளவாக் காதைக் குடைந்து தோண்டி
எட்டினமட் டறுப்பதற்கோ வில்லி யில்லை
இரண்டொன்று முடிந்துதலை இறங்கப் போட்டு

வெட்டுதற்கோ கவிஒட்டக் கூத்தனில்லை
விளையாட்டாக் கவிதைதனை விரைந்து பாடித்
தெட்டுதற்கோ அறிவிலாத் துரைக ளுண்டு
தேயமெங்கும் புலவரெனத் திரிய லாமே !'

என்ற தனிப்பாடல் ஒன்று இருக்கிறது. தமிழ்விடு தூது என்ற பிரபந்தத்தில் இச் செய்தி,

'.....................................................மேலோரிற்
பாத்தனதாக் கொண்ட பிள்ளைப் பாண்டியன் வில்லிஒட்டக்
கூத்தனிவர் கல்லாது கோட்டிகொளும்—சீத்தையரைக்
குட்டிச் செவியறுத்துக் கூட்டித் தலைகளெல்லாம்
வெட்டிக் களைபறிக்க'

என்று காணப்படுகிறது. அந்த அடிகளுக்குக் குறிப்புரை எழுதும்போது அந்நூலின் பதிப்பாசிரியராகிய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள், 'இவற்றிற் கூறப்பட்ட செய்திகள் "குட்டுதற்கோ" என வரும் தனிப் பாடலை ஒட்டி எழுந்தன போலும்; பெரியோர் பலர்க்கு இக் கதைகள் உடன்பாடல்ல' என்று கூறியிருக்கிறார்கள். பல செய்திகள் இங்ஙனம் ஆன்றோர்க்கு உடன்பாடல்லாதனவாகத் தோன்றுகின்றன.

கணைக்காலிரும்பொறை என்ற சேர மன்னனைச் செங்கணான் என்ற சோழன் ஒருவன் போரில் அகப்படுத்திச் சிறை வைத்தான் என்றும், அச்சேரன் மானம் பொறாது சிறைச்சாலையில் ஒரு பாட்டை எழுதி வைத்துவிட்டு இறந்தான் என்றும் புறநானூறு கூறுகிறது. சேரமானின்

நண்பராகிய பெரியகையார் என்ற புலவர் சோழன் செங்கணான் மேல் **களவழி நாற்பது** என்று ஒரு நூலைச் செய்து புகழ்ந்து சிறையிலிருந்த கணைக்கா லிரும்பொறையை விடுவித்துச் சென்றார் என்று **கலிங்கத்துப் பரணி** கூறுகிறது. இந்த இரண்டு வரலாறுகளில் எது உண்மையோ?

தமிழ் நூல்களில் இங்ஙனம் ஐயப்பாடுடைய செய்திகள் சில காணப்படுகின்றன. எனவே, புல வர்களின் வரலாறுகளை ஆய்வோர் நடு நிலையி லிருந்து அவற்றை ஆராய்ந்து முடிவு கட்டுதல் இன்றியமையாததாகும்.

---

# 12. புது யுகம்

## உரைநடையின் தோற்றம்

தமிழ் மொழிக்கு மட்டும் அன்று, இந்திய மொழிகள் யாவற்றுக்கும் கி. பி. பத்தொன்பதாம் நூற்றுண்டின் தொடக்கத்தைப் புது யுகத்தின் தோற்றம் என்று கூறவேண்டும். ஐரோப்பிய வியாபாரிகளோடு நம் நாட்டுக்கு வந்த பாதிரி மார்கள் அச்சுத் தொழிலை அந்தக் காலத்துக்கு முன்பே இங்கே புகுத்தியிருந்தார்கள். அச்சியந் திரங்கள் வந்த பிறகு இந்திய மொழிகளில் வசன நடை தோன்றியது. இந்தப் புதிய யுகத்தில் தமிழ் மொழிபற்றிய வரையில் தோன்றிய மாறுதல் களைக் கவனிப்போம்.

பழைய தமிழ் நூல்கள் எல்லாம் செய்யுள் நடையில் உள்ளவை. சிலப்பதிகாரம், பெருந் தேவஞர் பாரதம் போன்ற இரண்டொரு நூல் கள் வசனமும் செய்யுளும் கலந்து எழுதப் பட்டவை. இவற்றுள்ளும் வசனப் பகுதி மிக மிகக் குறைவே. உரையாசிரியர்கள் செய்யுட் களுக்கு உரை எழுதும்போது வசன நடையை மேற்கொண்டார்கள். அந்த நடையும் கடின மாகவே இருந்தது. உரையின் பொருட்டுப்

பழைய உரையாசிரியர் மேற்கொண்டதனால் வசன நடை தமிழில் உரை நடை எனப்படுவதுண்டு.

## மொழிப்பயிற்சியில் புதிய மாறுதல்கள்

முன்பெல்லாம் வசன நடை ஏன் பரவவில்லை? கருத்துக்களைச் சில எழுத்துக்களில் மனனம் செய்வதற்கு வசதியாக விளக்குவதற்குச் செய்யுள் நடை ஏற்றதாக இருந்தது. காகிதமும் அச்சும் இல்லாத காலத்தில், எழுத்தாணியைக் கொண்டு பனை ஏடுகளில் எழுதிவந்த காலத்தில் எழுத்து வேலையைச் சுருக்கிக்கொள்ள இந்தச் செய்யுள் நடை அவசியமாக இருந்தது. அதனால் அச்சியந்திரங்கள் தோன்றுமுன் வசன நடையில் எவரும் நாட்டம் செலுத்தவில்லை. பாதிரிமார்கள் தமிழ் மொழிக்குச் செய்த நன்மைகளில் மிகவும் முக்கியமானது வசன நடையை-உரை நடையை-ஓர் உருவாக்கிக் கொடுத்ததே யாகும். கிறிஸ்துவரின் வேதமாகிய விவிலிய நூலை எவரும் எளிதில் கற்றுக்கொள்ளும் பொருட்டு அவர்கள் தமிழ் வசனத்தில் மொழிபெயர்த்து அச்சிட்டு வெளியிட்டார்கள்.

அவர்கள் இங்கே புகுத்திய உரை நடையில் முற்றுப்புள்ளி, வினாக்குறி, விளிக்குறி, காற்புள்ளி, அரைப்புள்ளி போன்ற குறியீடுகளும் அவர்களால் வழக்கத்துக்குக் கொண்டு வரப்பட்டன.

அச்சியந்திரங்கள் இந்த நாட்டுக்கு வந்த பிறகு மொழிப் பயிற்சியில் பல புதிய மாறுதல்கள் தோன்றின.

19-ஆம் நூற்றுண்டுக்கு முன் சிறுவர்களுக்குக் கல்விப் பயிற்சி செய்யுள் வாயிலாகவே தொடங்கப்பட்டது. அச்சியந்திரங்களின் வரப் பிரசாதத்தினுல் வசன நடையில் எளிய பாடப் புத்தகங்கள் தோன்றின.

முன் காலத்தில் ஒவ்வொரு நூலையும் கையினுலேயே பிரதி செய்ய வேண்டியிருந்த காரணத்தினுல் நூல்கள் பரவவில்லை. அதனுல் பல நூல்களைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பு அக்காலத்தில் ஏற்படவில்லை. இரண்டொரு நூல்களைக் கற்றவர்கள் பண்டிதர்கள் என்று மதிக்கப்பட்டார்கள். சில நூல்களை மட்டும் பயில்வோருக்குத் தமிழ் மொழியிலுள்ள எல்லா வார்த்தைகளும் பழக்கத்துக்கு வர முடியாது. ஆகவே, நிகண்டுகள் தோன்றின. சொற்களையும், சொற்களின் பொருளையும் வகைப்படுத்திச் செய்யுட்களில் விவரிக்கும் நூல் நிகண்டு எனப்படும். நிகண்டினைக் கல்லாதவன் முன் காலத்தில் பண்டிதனுக மதிக்கப்படவில்லை. இக் காலத்தில் எல்லா நூல்களும் அச்சில் வந்திருப்பதனுல் பல நூல்களை எளிதிலே சொற்ப விலைக்கு வாங்கிப் படிக்கும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. பல நூல்களைப் பயில்வதனுல் மொழியிலுள்ள வார்த்தைகள் எல்லாம் ஏறக்குறைய ஒரு

மேலே கூறிய பாடப் புத்தகங்கள், வசன நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் முதலியன அறிவை எளிதிற் பரவச் செய்வதற்கு ஏற்ற கருவி களாயின. அதனால், கல்வி நாட்டில் பரவி வரலா யிற்று. பழைய நூல்கள் மலிவாகக் கிடைத்து வருகிறபடியால் இலக்கியப் பயிற்சியும் முன் காலத்தைவிட அதிகமாகி வருகிறது. நூல் நிலை யங்களும் வாசகசாலைகளும் நாட்டிற் பெருகி வரு கின்றன.

# 13. வளரும் தமிழ்

## புதிய அணிகள்

அச்சியந்திரத்தின் தோற்றம் தமிழுக்குப் புதிய யுகத்தைக் கொடுத்தது என்று முன் கட்டுரையில் குறித்தோம். புதிய யுகத்தின் தொடக்கத்துக்கு வசன நடை முக்கியமான காரணம் என்பதையும் கண்டோம். வசன நடையின் வளர்ச்சியால் தமிழில் நவீனம், சிறுகதை, நாடகம், கட்டுரை, கவிதை, ஆராய்ச்சி முதலியவை பெருகலாயின. மொழிபெயர்ப்பின் வாயிலாகப் பல மொழிகளிலுள்ள நல்லனவும் தமிழிற் புகுந்து அணி செய்யலாயின. இவற்றைச் சுருக்கமாக இங்கே ஆராய்வோம்.

**நவீனம்:** ஆங்கில மொழி நமக்கு அளித்த செல்வங்களுள் நவீனம் அல்லது நாவல் ஒருவகை. ஆங்கிலம் கற்ற சிலர் அம்மொழியிலிருந்து பல அரிய நாவல்களைத் தமிழில் பெயர்த்து எழுதலாயினர். ஆங்கில நாவல்களின் சட்டகத்தை (Outer frame) வைத்துக்கொண்டு, அந்நியமாகக் காணப்பட்ட ஊர்களையும் பேர்களையும் தமிழ் மொழிக்கு ஏற்ப மாற்றிப் புதிய ரக நாவல்களைப் பலர் எழுதலானார்கள். சுயமான கற்பனையைக்

கொண்டு புதிதாக மூலநாவல் தமிழ் மொழியில் தொடக்கத்தில் ஒரு சில தோன்றினவே தவிர அதிகமாகத் தோன்றவில்லை. அப் பயிற்சியை முதன்முதல் இந்தியாவில் கைக்கொண்டவர் வங்காளிகளே. வங்காளிகளை ஒட்டி மகாராஷ்டிரரும் மூல நாவல்களை எழுதலானார்கள். தமிழறிஞரிற் சிலர் வங்க மகாராஷ்டிர நாவல்களைத் தமிழில் மொழிபெயர்த்துத் தந்திருக்கிறார்கள். மக்களுக்கு நாவல் வேட்கை அதிகமாகிவிட்டது. அதன் காரணமாகக் கற்பனையும் அறிவும் நாட்டிற் பரவலாயின. மொழிபெயர்ப்பு நாவல்களும் பிறமொழி நாவல்களைத் தழுவி எழுந்த நாவல்களும் தோன்றிய பின் இக்காலத்தில், தமிழிற் பல மூல நாவல்கள் தோன்றி வருகின்றன. ஆணும் பெண்ணும் உட்பட இருபாலாரிலும் இப்பொழுது பல நாவலாசிரியர்கள் தோன்றியுள்ளார்கள்.

**சிறுகதை :** சிறுகதை என்பது தமிழர் முன் அறியாததொன்று. ஆங்கில மொழியைத் தமிழர் கற்றுக்கொண்ட பிறகு தமிழிற் பல சிறுகதைகள் தோன்றியுள்ளன. சொந்தக் கற்பனையோடு சிறுகதை எழுதக்கூடிய எழுத்தாளர் பலர் இக்காலத்திலே தமிழ் நாட்டில் இருக்கிறார்கள். பத்திரிகைகள் பல, சிறுகதைகளை ஆதரித்து வருகின்றன.

**நிகழ்ச்சி விவரக் கட்டுரைகள் :** சிறு கதைகளைப் போல் ஒரு நிகழ்ச்சியை மையமாகக் கொண்டு எழுந்த கட்டுரைகள் ஆங்கிலத்தில் பல பலவாக

இருக்கின்றன. சிறு கதைகளுக்குரிய மதிப்பு இவைகளுக்கும் உண்டு. சுவையில் இரண்டும் ஒன்றே. ஆனால் இத்தகைய கட்டுரைகளை எழுதுதல் கஷ்டம். இத்துறையிற் சில அறிஞர்கள் கைதேர்ந்து தமிழணங்குக்குப் பல புத்தணிகளைக் கொடுத்து வருகிறார்கள்.

**நாடகம்** : காவியம் முதலிய பெரிய கதைகளை மேடையில் நடிப்பதற்கு ஏற்ப எழுதப்படும் நாடகம் ஒரு வகை. தமிழருக்கு இது புதிதன்று. குறவஞ்சி, பள்ளு போன்ற நாடகங்களை அவர்கள் அறிவார்கள். வடமொழியின் தொடர்பினால் காப்பியக் கதை நாடகங்கள் தமிழில் மலிந்து கிடக்கின்றன. சில அறிஞர்கள் மேல்நாட்டு நாடக முறையை ஒட்டித் தமிழில் பல கதை நாடகங்களை மிக அழகாக எழுதியிருக்கிறார்கள்.

சிறு கதையை நாடகமாக எழுதும் முறை மற்றொரு வகை. இந்த வகையைச் சேர்ந்தவை **ஓரங்க நாடகங்கள்** எனப்படும். சிறு கதையிலுள்ள சுவை ஓரங்க நாடகத்திலும் காணப்படுகின்றது. ஓரங்க நாடகங்கள் தமிழருக்குப் புதியவை.

**கவிதை** : பாட்டென்றால் சாதாரணப் படிப்பாளிகளாகிய பொதுமக்கள் அஞ்சியகாலம் ஒன்று இருந்தது. தற்கால முறைக்கு ஏற்ப உணர்ச்சி ததும்பும் கவிதைகளை எழுதி இந்த அச்சத்தை முதலில் தகர்த்தெறிந்தவர் சி. சுப்பிரமணிய பாரதியாரே. தற்காலக் கவிதையுலகிற்குப் பிதா

வாக விளங்கியவர் அவரே. அவரைப் பின்பற்றி இக்காலத்தில் பலர் அருமையான கவிதைகளை எழுதி வருகிறார்கள்.

**ஆராய்ச்சி :** இலக்கிய ஆராய்ச்சி, மொழி வளத்தில் முக்கியமான பங்கைப் பெற்றிருக்கிறது. அறிஞர்கள் சிலர் இத்துறையில் அரிய சேவை செய்து வருகிறார்கள். இவர்களுடைய ஆராய்ச்சி யின் பயனாக இன்று பொது மக்கள் கடுமையான இலக்கண இலக்கியங்களின் உயர்ந்த பண்புகளை அறிந்து ஆனந்தித்து வருகிறார்கள். தமிழ் மொழி யின் பழம் பெருமை, தமிழரின் பண்பாடு, தமிழ் இலக்கியத்தின் சீரிய அமைப்பு முதலியவைகளை யாவரும் எளிதில் உணர்ந்துகொள்ளுமாறு இந்த ஆராய்ச்சிகள் அமைந்துள்ளன.

**விஞ்ஞானம் :** விஞ்ஞானத் துறைகள் பல. இருபதாம் நூற்றாண்டின் இந்தப் பகுதியை விஞ் ஞான காலம் என்று கூறலாம். பௌதிகம், ரசாயனம், பிராணி சாஸ்திரம், வான நூல், நில நூல், விவசாயம் என விஞ்ஞானம் பல திறப் படும். தமிழில் இக்காலத்தில் இத்துறையிற் பல புது நூல்கள் தோன்றி வருகின்றன.

## தமிழ்வளர்ச்சிக்கு ஏற்ற கருவிகள்

வளரும் தமிழ் பெற்றுவரும் அணிகளை மேலே விளக்கினோம்; அச்சியந்திரத்தின் சகா யத்தினால் மட்டும் தமிழ் வளர்ந்து வருகிறதென்று

சொல்வதற்கில்லை. தமிழ் வளர்ச்சிக்காகப் பாடு படுவோர் பலர். நூலாசிரியர் ஒருபுறம் சேவை செய்வது நிற்கப் பதிப்பகத்தார் பல அரிய நூல்களைக் கண்ணைக் கவரும் வடிவில் அழகாக வெளியிட்டு வருகின்றனர். தினத்தாள்களும் வேறு ப்பத்திரிகைகளும் தமிழை வளர்ப்பது நமக்குத் தெரியும். வானொலி இத்துறையில் செய்து வரும் சேவை மிகவும் பாராட்டத் தக்கது.

மேடைகளிலும் பெருங்கூட்டங்களிலும் பேசுவது ஒரு கலை. பேச்சின் மூலம் தமிழறிவை எளிதிற் பரவச் செய்ய இயலும். பேச்சு வன்மை எளிதிற் கிடைக்கக் கூடியதன்று. "புலவர் ஆயிரத்துக்கு ஒருவராக இருக்கலாம்; ஆனால் பேச்சாளர் பத்தாயிரத்துள் ஒருவர் காணப்படுவது அருமை" என்ற கருத்துத் தோன்ற ஔவையார் அக்காலத்தில் ஒரு கவி பாடியுள்ளார். அவர் வார்த்தையைப் பொய்ப்பிக்கும்படி இக்காலத்தில் அரிய பேச்சாளர் பலர் தமிழ் நாட்டில் விளங்குகிறார்கள். இவர்களைக் கொண்டு நாட்டின் பல பகுதிகளிற் பெருங் கூட்டங்கள் நடைபெறுகின்றன. இவைகளை ஆதரிக்கும் கழகங்கள் பல.

அவை கம்பர் விழா, திருவள்ளுவர் விழா, பாரதி விழா என்பவற்றின்மூலம் தமிழார்வத்தை நாட்டில் பரப்பி வருகின்றன.

மேலே கூறிய கழகங்களே அன்றி வேறு வகைக் கழகங்களும் தோன்றியுள்ளன. இக்

கழகங்களுள் தமிழ் வளர்ச்சிக் கழகம் ஒன்று. இதன் சார்பில் ஆண்டுதோறும் தமிழ் விழா கூட்டப் பெற்று வருகிறது. தமிழ் மொழியில் அருமை யான புத்தகங்களை எழுதுவோருக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. கலைக்களஞ்சியம் (Encyclopaedia) என்ற அரிய செய்தித் தொகுதிகளை இக் கழகம் வெளியிட வேலை செய்து வருகிறது. இது போற்றத்தக்க செயலாகும்.

## மாபெருந் தமிழகம்

பழங்காலத்தில் வடக்கே திருவேங்கட மலையும், தெற்கே குமரியும், கிழக்கும் மேற்கும் கடலும் தமிழ் நாட்டின் எல்லைகளாக இருந்தன. குமரி என்பதை ஆறு என்று பழம் புலவர் குறித்துள்ளார்கள். தென் பகுதி கடலாற் கொள்ளப் பட்டது. மேற்குப் பகுதியையும் வடமேற்குப் பகுதியையும் முறையே மலையாளமும் கன்னடமும் கவர்ந்துகொண்டன. வடக்கே தெலுங்கு ஆதிக்கம் பெற்றது. இந்த வகையில், பிற்காலத்திலே தமிழ் வழங்கும் பரப்புக் குறுகிவிட்டது.

இலக்கியங்களிற் கண்ட தமிழகப்பரப்பு இது. ஆனால் நாம் நேரிற் காணும் பரப்பு வேறு. தமிழர் இலங்கை, மலேயா, பிஜித் தீவுகள், தென்னுப்பிரிக்கா முதலிய இடங்களிலும் பரவியிருக்கிறார்கள். நம் பாரத நாட்டிற்குள்ளேயே வங்காளம், பம்பாய், டில்லி இராச்சியங்களிலும் குடியிருக்

கிருர்கள். தமிழின் வியாபகம் இக்காலத்தில் இந்தப் பிரதேசங்களில் எல்லாம் இருக்கிறது. வெளிநாடுகளிற் குடியேறியிருக்கிற தமிழர்களிடம் தமிழ் மொழிப்பற்று மிகுதியாகக் காணப்படுகின்றது.

தமிழிலுள்ள பல அரிய கருத்துக்கள் சில வெள்ளைக்காரர்களால் ஆங்கிலம் முதலிய ஐரோப்பிய மொழிகளிற் பெயர்க்கப்படவே தமிழை உணர்ந்துகொள்ளாத பலருக்கு நம் மொழியின் அருமை இக்காலத்தில் தெரிந்திருக்கிறது. மேல் நாட்டிலே சில நகரங்களில், தமிழ்ச் சுவடிகள் போற்றப்பட்டு வருகின்றன. தமிழில் ஆர்வமுள்ள ஐரோப்பியர் சிலர் அங்கங்கே இருக்கிருர்கள். தமிழ் மக்களிற் சிலரும் தமிழ்மொழியைப் பற்றி வேறுநாட்டு மொழிகளில் எழுதி வரத் தொடங்கியிருக்கிருர்கள். எனவே, தமிழின் நடமாட்டம் இப்பொழுது அதிகமாகி வருகிறது.

# 14. கலைப் பயிர்

தமிழ்மொழி அடைந்துவரும் பெருமையைப் பற்றிக் கூறி வந்தபோதிலும், அது சில காரணங்களினுற் சிறுமையுற்று வருவதையும் நாம் மறைப்பதற்கில்லை.

சங்க காலம் முதற்கொண்டு தமிழில் இரு வேறு நடைகள் இருந்து வருகின்றன. ஒன்று ஏட்டுத் தமிழ் நடை ; மற்ருென்று பேச்சுத் தமிழ் நடை. இந்த இரண்டு நடைகளும் எந்த மொழியிலும் இயல்பாகக் காணப்படுவனவே. இக்காலத்திற் சிலர் தம் எழுத்தைப் பேச்சுத் தமிழில் எழுதி வருகிருர்கள். பேச்சுத் தமிழிலும் கிராமியப் பேச்சு, சேரிப் பேச்சு, கொச்சைப் பேச்சு-இவ்விதம் பல உட்பிரிவுகள் உண்டு. அத்தனையும் நவீனம், சிறுகதை இவைகளிற் காட்சியளிக்கின்றன. இந்தப் பிரசாரம் முதலில் சில பத்திரிகைகளாலேயே தொடங்கப்பட்டது. இந்த விதம் பேச்சுத் தமிழ் வியாபகம் அடைந்து வருகிறதனுல் மக்கள் ஏட்டுத் தமிழ் நடையை மறந்து வருகிருர்கள்.

ஏட்டுத் தமிழ்நடை கடினம் என்பதன்று. இலக்கண அமைதிக்கு உட்பட்டு அதனை எளிய நடையில் எழுதலாமே. இக்காலத்திலும் இவ்விதம் இலக்கண வரம்பைக் கடவாமல் எழுது

வோர் பலர் இருக்கின்றனர். ஆனால் சிலர் இதனை அறவே தழுவாமல் பேச்சுத் தமிழையே எழுத்தில் ஆதரித்து வருகிறார்கள். இது இரங்கத் தக்கது.

மக்களின் மனப் பண்பைக் கெடுக்கக்கூடிய புத்தகங்கள் பல இக்காலத்தில் தோன்றி வருகின்றன. இவை தமிழுக்கோ தம்மைப் பயில்வோருக்கோ எவ்வகையிலும் ஆக்கம் தரமாட்டா.

இலக்கியங்கள் மக்களின் பண்பை வளர்க்கக் கூடியனவாக அமையவேண்டும். பண்பாட்டையும் மக்களின் பொது ஒழுக்கத்தையும் வளர்க்கும் நோக்குடன் ஆசிரியர்கள்—எழுத்தாளர்கள்—தம் பேனாவை ஓட்டவேண்டும்.

இப்பொழுது நாட்டில் மக்களுக்குப் படிக்க வேண்டும் என்ற ஆவல் அதிகமாக இருக்கிறது. புத்தகங்களை வாங்கிச் சேர்க்கவேண்டும் என்ற ஆர்வம் மிகுந்து வருகிறது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி நாட்டு நலத்துக்கும் மனித வாழ்வுக்கும் பயன்படத் தக்க நூல்களை எழுதுவது எழுத்தாளரின் முக்கியமான கடமையாகும். பதிப்பகங்கள் இந்த விஷயத்தைக் கவனித்துப் பொருளாதாரம், சமூகம், அரசியல், ஆத்மிகம் முதலிய துறைகளிலே தமிழ்மக்களின் மனப்பண்பை வளர்க்க முன் வருவது அவசியமாகும்.

வருங்காலத்திலே தமிழ் நல்ல நிலையை அடைதல் கூடும் என்பதற்கு ஏற்ற அறிகுறிகள் தோன்றி

வருகின்றன. தமிழ் முன்னணி நோக்கி வளர்ந்து வருவதற்கேற்ற விசைகள் அங்கங்கே உருக்கொள்ளும் நிலைமையில் உள்ளன.

மொழி வளர்ச்சியில் இருவகை உண்டு. இந்த வளர்ச்சியை ஒரு மரத்தின் வளர்ச்சியோடு ஒப்பிடலாம். மரத்தில் இலைகளும் கப்புக்களும் மிகுதியாக வளர்ந்து வருவது (Vegetative Growth) ஒரு வகை. மலர்களும் பழங்களும் மிகுதியாகப் பெருகுவது (Productive Growth) மற்றொரு வகை. தாவரத்துக்கு இரண்டும் அவசியம் என்றாலும் பின்னதே மிகுதியாக வேண்டும். இலைகளும் கப்புக்களும் அதிகமாகிவிட்டால், பலன் அளிப்பு மட்டமாகிவிடும். தமிழ் மொழியிலும் இப்படித்தான்.

நூல்கள் பெருக வேண்டும் என்ற நோக்கத்துடன் உதவாத பொருள்களைப்பற்றிக் கேவலமாகப் பேச்சுநடையில் புத்தகங்களின் எண்ணிக்கையைப் பெருக்குவது உண்மை வளர்ச்சியாகாது. தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் இன்றியமையாத அரிய நூல்கள் தோன்றவேண்டும். அவர்களுக்கு அறிவைத் தரும் புத்தகங்கள் வெளிவரவேண்டும்.

# 15. தமிழும் தமிழரும்

## வேற்றுமையில் ஒற்றுமை

பாரத நாட்டில் பல இடங்களில் இப் பொழுது பேசப்படும் முக்கியமான மொழிகள் சிந்தி, குஜராத்தி, பஞ்சாபி, இந்துஸ்தானி, வங்கம், சந்தாலி, கோண்டி, உரியா, மராட்டி, தெலுங்கு, கன்னடம், மலையாளம், தமிழ் என்பன. இவற்றைத் தவிர மிகச் சிறுபான்மையோர் பேசும் மொழிகள் பல. இந்திய மொழிகளோடு நெருங்கிய உறவு பெற்றுள்ள நேபாலி இதில் சேர்க்கப்பட வில்லை. இமயம் முதல் குமரி வரையில் உள்ள இந்திய மக்களின் பழக்க வழக்கங்களில் சில ஒருமைப்பாடுகளை இக்காலத்தில் நாம் காண்கிறோம். மேலே கூறிய மொழிகளிலும் இவ்வித ஒற்றுமைகள் சில உள்ளன. இலக்கணம், காவிய அமைப்பு, கலைகள், சமய நூல்கள், நீதி நூல்கள் முதலியவற்றில் இந்த ஒற்றுமை மிகுதியாக இருக்கிறது. இந்த ஒற்றுமைக்கு முக்கிய காரணமாக இருப்பது வடமொழி. வடமொழி என்றும் பேச்சு வழக்கில் இருந்தது இல்லை. பல பாஷைகளைப் பேசி வந்த அறிஞர்கள் ஒன்று கூடிய சந்தர்ப்பங்களில் எழுத்திலும் பேச்சிலும் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள வடமொழியைக் கருவியாகக் கொண்

டார்கள். ஒவ்வொரு மொழியிலும் புலமைபெற்று விளங்கிய புலவர்கள் வடமொழியையும் தத்தம் தாய் மொழியோடு சேர்த்துப் பயின்றனர். வட மொழி வாயிலாகப் பல மொழிகளுக்குள் இந்த ஒருமைப்பாட்டை உண்டாக்கியவர்கள் இந்த அறிஞர்களே. பல பாஷைகளுக்கும் பொதுவாக உள்ள ஒற்றுமைகளைக் கூர்ந்து நோக்கிய சில புல வர்கள் தமக்கு வடமொழியிலிருந்த அபிமானத் தாலோ, அல்லது மொழிக் குடும்பங்கள் வேறு வேறு என்று அறியாததனுலோ 'எல்லா மொழி களுக்கும் வடமொழி தாயாக இருக்கிறது' என்று எழுதிச் சென்ருர்கள்.* ஆங்கிலம் இந்தியாவின் அரசியல் மொழியான பிறகு ஆங்கில மொழியில் உள்ள பல அம்சங்கள் எல்லா மொழிகளிலும் புகுந்து விட்டன. முஸ்லிம்களின் ஆட்சிக் காலத் தில் அவர்கள் மொழி அரசியல் மொழியாக இருந் தது. அக்காலத்தில் ஜமீன், ஜப்தி, தஸ்தாவேஜி, வக்கீல், கச்சேரி, வஜா, பாக்கி முதலிய அரசியல் சம்பந்தமான சொற்களும் ஜல்தி, தயார், நிஜார் போன்ற பிறவும் இந்திய மொழிகளிற் கலந்து போயின.

இப்போது சிறந்த போக்குவரவுச் சாதனங்கள் ஏற்பட்டதனுலும் இந்தியா முழுவதற்கும் பொது வான அரசாட்சி இருப்பதனுலும் பல மொழி

* தெலுங்கு மொழியில் புலமை பெற்று விளங்கிய **கேதன** என்பவர் தாம் இயற்றிய **ஆந்திர பாஷா பூஷணம்** என்ற நூலில் இவ்வாறே குறித்துள்ளமை ஓர் உதாரண மாகும்.

களைப் பேசுவோர் தம்முள் மிகுதியாகக் கலந்து கொள்ளும் வாய்ப்புக்கள் அதிகமாகி விட்டன. இந்த வாய்ப்புக்கள் காரணமாக ஒரு மொழியைப் பேசுவோர் பிற மொழிகளில் உள்ள அரிய கருத்துக்களையும் சொற்களையும் தம் மொழிகளில் அறிந்தோ அறியாமலோ புகுத்துவது இயல்பு. தமிழ் மொழியும் இந்த இயற்கை நியதிக்கு உட்பட்டதே.

## இது ஆக்கமா, அழிவா?

புதிய கருத்துக்களும் சொற்களும் புகுந்து கொண்டே இருந்தால் ஒரு மொழி நாளடைவில் தன் பழமையை இழந்து உருத்தெரியாமல் குலைந்து விடாதோ என்று சிலர் கருதலாம். புதியன புகுதலால் எந்த மொழியும் அழிந்து குலைந்து விடாது. ஆனால் அதன் உருவம் திரிந்து போதல் கூடும். சங்க காலத்தில் தமிழ் மொழியின் நடை, நூல்களின் போக்கு, இலக்கண அமைப்பு இவை ஒரு வகை. இடைக் காலத்தில் புகுந்த நூதன முறைகள் பல. இவை பழைய போக்கை மாற்றிப் புலவர்களைப் புதிய வழிகளில் நூல்கள் எழுதத் தூண்டின. பிற்காலத்திலே பின்னும் பல புதிய மாறுபாடுகளைத் தமிழ் மொழியும் புலவர்களும் ஏற்றுக்கொண்டதனால் தமிழ் மொழியிற் புதிய யுகம் பூத்தது. இந்த மாறுபாடுகளாலே தமிழ் அழிந்தா போயிற்று? எவை எவை அழிந்துவிட்டனவாகச் சிலர் கருதுகிறார்களோ அவை எல்லாம்

அந்த அந்தக் காலத்து நூல்களிற் சிரஞ்சீவிகளாக நிலைபெற்று நூல் வழக்கோடு நிற்கின்றன. ஆகையால் அழிவாதல் எப்படி? இயற்கை நியதியினால் ஒரு மொழி நாளுக்கு நாள் வளர்ச்சியில் வேறுபட்டு வருவதனால் அதற்கு ஆக்கமே ஒழிய அழிவு ஒருநாளும் இல்லை. தமிழ் மொழி அழிந்துவிடுமோ என்று அஞ்சுவாருக்கு, நன்னூலின் ஆசிரியராகிய பவணந்தி முனிவர்,

> 'பழையன கழிதலும் புதியன புகுதலும்
> வழுவல[1] கால வகையி னானே[2]'

என்று கூறியிருப்பது ஆறுதல் தரக்கூடும்.

## வங்கம் காட்டிய வழி

வங்க மொழி பழையது அன்று. கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் தோன்றியது அது. அங்ஙனம் இருந்தும் இந்திய மொழிகள் பலவற்றைக் காட்டிலும் அது மிகுதியாக முன்னேறிவிட்டது. இதற்குக் காரணம் யாது?

கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தன்னலமற்ற அறிஞர் பலர் வங்க நாட்டிலே தோன்றினார்கள். கல்கத்தா ஆங்கில அரசாட்சியின் தலைநகரமாக இருந்ததனால் வங்காளிகளுக்கு நல்ல வாய்ப்புக் கிடைத்தது என்று எண்ணுகிறேன். வங்காளிகள் விரும்பி யிருந்தால் மாபெரும் வங்

1. வழுவல - குற்றம் இல்லை. 2. காலவகையினான் - கால வேறுபாடுகளால்.

கத்தை உருவாக்கி யிருக்கலாம். ஆனால் அவர் களுடைய நோக்கம் தங்கள் நாட்டளவில் குறுகி விடவில்லை. தங்கள் நாடு, தங்கள் மொழி என்ற வரம்புகளை ஏற்படுத்திக்கொண்டு வங்க அறிஞர் கள் அடைந்து கிடைக்கவில்லை. மாபெரும் பார தத்தை உருவாக்கவே அவர்கள் பாடுபட்டனர். 'வந்தே மாதரம்' என்ற கீதம் உதயமானது எங்கேயென்று எண்ணிப் பாருங்கள்!

வங்க அறிஞர்கள் உலகத்தில் எங்கெங்கே நல்லவற்றைக் கண்டார்களோ அவற்றை யெல் லாம் தங்கள் இலக்கியப் பொக்கிஷத்தில் கொண்டு வந்து சேர்த்தார்கள். தேனீக்களின் வேலையைத் தான் அவர்கள் செய்தார்கள். என்றாலும் அவர் கள் தேனீக்களினும் உயர்ந்த ஒரு காரியத்தைச் செய்திருக்கிறார்கள். அது யாது? தாங்கள் புதி யனவாகக் கொண்டுவந்து சேர்த்தவற்றை இந்தி யாவின் மற்றப் பகுதியினருக்கும் அள்ளித் தாராள மாக வழங்கினார்கள்.

இந்தியப் பண்பாடு, சமயம், கலைகள், கல்வி முதலியவற்றை அயல் நாட்டார்கள் வங்காளிகள் வாயிலாகவே அறிந்துகொண்டார்கள். ராஜா ராம்மோஹன் ராய், கேசவசந்திர சேனர், ரமேச சந்திர தத்தர், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர், ஜகதீசசந்திர போஸ், ரவீந்திர நாத டாகுர் போன்றவர்களை வங்கம் அளித்த இந்திய மணிகள் என்று கூறவேண்டும்.

தென்னாட்டவர் எவ்வகையிலும் வங்கத்தினரைவிட அறிவிற் குறைந்தவர் அல்லர். பண்டைக் காலத்திலே கப்பல்களில் அயல் நாடுகளுக்குச் சென்று அங்கே இந்தியக் கலைகளைப் பரப்பியவர்கள் இவர்களே. வேற்று நாடுகளில் வாணிகத் தொடர்பு பெரும்பாலும் தென்னாட்டுடன்தான் அதிகமாக இருந்தது. தென்னாட்டவர்களான சங்கராசாரியர், இராமாநுஜர், மத்துவாசாரியர் முதலியவர்கள் மாபெரும் பாரதத்தை ஒரு துறையில் உருவாக்கிய மேதாவிகள். இந்தியச் சிற்பக்கலை, கோவில் வழிபாட்டு முறை இவை இரண்டும் தென்னாட்டிலிருந்தே மற்ற இடங்களுக்குப் பரவின. தென்னாட்டவரிலே தமிழர், வேற்று நாடுகளில் குடியேறி இந்து ஆசாரம், கலை முதலியவற்றை அங்கெல்லாம் பரப்பினார்கள். அவர்களுக்கு இருந்த வாய்ப்பு எக்காரணத்தாலோ பிற்காலத்தில் நழுவிவிட்டது. அதுபற்றி இப்பொழுது நாம் வருந்தவேண்டுவது இல்லை. நம்மிடம் அறிவும் ஆற்றலும் அதிகமாக உள்ளன. மனம் இருப்பின் விரும்பியவற்றைத் தமிழர்களாகிய நாம் சாதிக்க முடியும். நம்முடைய நோக்கமெல்லாம் மாபெரும் பாரதத்தை உருவாக்கும் முயற்சியிற் செல்லவேண்டும். நம் மொழிச் செல்வத்தை உலகுக்குக் காட்டி நாட்டுக்கு மதிப்பைத் தேடுதல் எளிதே. பத்தொன்பதாம் நூற்றாண்டில் வங்க அறிவாளிகள் மேற்கொண்ட சேவை நமக்கு இன்று தேவையாக இருக்கிறது.

## பாரதியும் தமிழும்

*சுப்பிரமணிய பாரதியார் சிறந்த புலவர். அவருடைய மனம் தமிழ் நாட்டோடு குறுகிவிடவில்லை. மாபெரும் பாரதத்தையே அவருடைய கவிகள் உருவாக்கியுள்ளன. தமிழ் மொழியைப் பற்றி அவர் கூறியுள்ளன இங்கே சிந்திக்கத் தக்கன :*

'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்'

'சென்றிடுவீர் எட்டுத் திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்'

*என அவர் கூறுகிறார். மற்றோர் இடத்தில், தமிழ்த் தாய் தன் புதல்வர்க்குக் கூறுவனபோல், சில செய்திகளை அவர் கூறுகிறார். அந்த இடத்தில் ஒரு பேதையின் சொற்களாக அவர்,*

'புத்தம் புதிய கலைகள்—பஞ்ச
பூதச் செயல்கள் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே—அந்த
மேன்மைக் கலைகள் தமிழில் இல்லை'

'சொல்லவும் கூடுவ தில்லை—அவை
சொல்லும் திறமை தமிழ்மொழிக் கில்லை
மெல்லத் தமிழ்இனிச் சாகும்—அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்'

என்கிறார். கொள்வனவன்றி நாம் மற்றவர்களுக்கு வழங்கவேண்டியவை பல உள்ளன. நம் பழம் பெருமையைப் பாராட்டிக் கொள்வதை விட்டு அரிய தமிழ் நூல்கள் பலவற்றை வேறு மொழி களிற் பெயர்த்து வெளியிட வேண்டியது அவற் றுள் இன்றியமையாதது. அங்ஙனம் வெளியிடின் அவற்றின் வாயிலாகப் பிற நாட்டார் நம்மை அறிந்துகொண்டு மதிப்பார் என்பதைக் காட்ட,

'மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வ திலோர் மகிமை இல்லை
திறமான புலமை எனில் வெளிநாட்டார்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்'

என்று அறிவுறுத்துவதோடு, பின்னும்,

'தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகைச் செய்தல் வேண்டும்
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்'

என்று நமக்குக் கூறுகிறார். பாரதியார் கூறியுள்ள நெறிகளிற் பலர் இப்பொழுது தொண்டாற்றி வருகின்றனர். அன்னாரின் முயற்சிகளாலே தமிழ் மொழி வருங்காலத்தில் மேன்மேலும் வளர்ச்சி யுற்றுப் புகழடையும் என்பதில் ஐயமில்லை.

# பொருள் அகராதி

[எண் - பக்க எண்]


அகம், புறம், 14
அகராதிகள், 68
அச்சியந்திரம், 65
அத்துவைத நூல்கள், 24
ஆராய்ச்சி, 74
ஆழ்வார்கள், நாயன்மார்கள், 21, 25-6, 29
இசையின் மறுமலர்ச்சி, 47
இலக்கண நூல்கள், 22
இந்திய மொழிகளின் ஒருமைப்பாடு, 80-81
இயற்பெயர் தெரியாத புலவர், 51-2
இலக்கியமும் மதமும், 19-24
இலக்கிய வளர்ச்சியும் கலைப் பெருக்கமும் நல்ல அரசியலில் தோன்றும், 36
உரைநடை நூல்கள், 69
உரைநடையின் தோற்றம், 65-6
உரையாசிரியர்கள், 39-40
எட்டுத் தொகை, 13-17
ஓவியமும் சிற்பமும், 48
கட்டுக் கதை, 60
கட்டுரை, 72
கடல் விழுங்கிய நிலம், 7-8
கர்ண பரம்பரைச் செய்திகள், 60
கலைகளின் மறுமலர்ச்சி, 24
கலை நூல்களின் ஆசிரியர், 49-50
கவிதை, 73
கலைப்பயிர், 78-80
குறுகிய நோக்கம், 23, 41-5
கூத்து, 46
கொடுந்தமிழ் நாடுகள், 8
கொள்வனவும் கொடுப்பனவும், கோவில்களும் மடங்களும் தமிழை வளர்த்தமை, 43
சங்க நூல்கள், 18, மறுமலர்ச்சி, 68
சமணர்: இலக்கணங்கள், 34, உரைகள், 35, காப்பியங்கள், 22, 30, 33, தமிழ்த் தொண்டு, 31, துறவறத்தையே சிறப்பாகக் கூறுவர், 33-4, புதிய தொண்டு, 22, வடமொழிக் கலப்பு, 35, வாழ்வு தமிழோடு ஒன்றியது, 32, விழிப்பு, 30, வீழ்ச்சியும் எழுச்சியும், 31-2.
சமணரும் பௌத்தரும், 21
சமயச் சார்புள்ள நூல்கள், 20
சித்த வைத்தியம், 48-9
சிறு கதை, 72
செந்தமிழ், கொடுந்தமிழ், 8
சைவசித்தாந்தம், 24
சோதிட நூல்கள், 49
தமிழ்த் தெய்வம், 4
தமிழ் நடை இருவகை, 78
தமிழ் நாட்டின் எல்லை, 76
தமிழ்ப் புலவர்கள், 51-9
தமிழ்மொழி: அநாதி காலத்தது, 12, அமிழ்தினும் இனியது, 4, இசை, 46,

இருண்டகால நூல்கள், 41-5, இலக்கணங்கள், 34, உரைநடை நூல்கள், 69, என்றும் உள்ளது, 4, ஐயப்பாடுள்ள செய்திகள், 60-64, கலைகள், 47-50, கலைப் பயிர், 78-80, திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது, 6, பல நூல்களின் அழிவு, 68, பழைய மொழிகளில் ஒன்று, 1, புதிய அணிகள், 71, புதிய யுகம், 65-70, பொதிய மலையிற் பிறந்தது, 2-3, பொற்காலம், 36-40, விழாக்கள், 75, வெளிநாடுகளில் வியாபகம், 76-7
தமிழ்மொழிக்குச் சூரியன், குழந்தை, மல்லிகைமாலை, 3
தமிழ் மொழியைப் புலவர் பாராட்டிக் கூறியவை, 3-4
தமிழ் வளர்ச்சிக் கழகம், 76
தமிழ் வளர்ச்சிக்கேற்ற கருவிகள், 74
தமிழ் விழாக்கள், 75
தமிழ்நாட்டின் பரப்புச் சுருங்கியது, 76
தமிழிசை, 46
தமிழரின் நிலப் பிரிவுகள், 19, பண்பாட்டு நூல் தொல்காப்பியம், 13-4, வழிபாட்டு முறை, 19
தமிழும் தமிழரும், 81-8
தலபுராணமும் பிரபந்தங்களும், 44
தன்னேரிலாத தமிழ், 3
திராவிடம்—தமிழ், 7
திராவிட மொழிக் குடும்பம், 6
திராவிட மொழிகளின் ஒருமைப்பாடு, 7
தொகை நூல்களின் தோற்றம், 13
தொல்காப்பியம் தமிழரின் பண்பாட்டு நூல், 13-4
ந : ஒரு பட்டம், 33
நாட்டின் பிற்கால நிலை, 41
நாடக நூல்கள், 47
நாடகம். 73
நாயன்மார்கள், ஆழ்வார்கள், 21, 25-6, 29
நாவல் அல்லது நவீனம், 71
நிகண்டுகள் அவசியமில்லாமற் போனமை, 68
நுண்கலைகள், 46-8
நூல்களும் அவை தோன்றிய காலமும் 40
நூல் வழக்கு, பேச்சு வழக்கு, 1
நூல் வழக்கு மொழிகளில் வகை இரண்டு, 1
பக்தி நூல்களாக உள்ள பிரபந்தங்கள், 30
பக்தி நூல்களிற் பிற்காலத்தவை, 44
பக்திப் பாடல்கள், 25
பக்தி மார்க்கம், 26
பத்திரிகைகள், 69
பத்துப்பாட்டு, 14-7
பதினெண் கீழ்க்கணக்கு 13, 18

பல நூல்கள் அழிந்தமை, 12-3, 68
பழங்காலக் கலைகள் குன்றியமை, 24
பழைய மொழிகள், 1
பாட்டின் தொடர்களால் பெயர் பெற்ற புலவர், 52-3
பாட்டியல், 34
பாட பேதமும் தவறுகளும், 68
பாணரும் விறலியரும், 46
பாரதியாரும் தமிழும், 87
பிரபந்தங்கள், 42, 44
பிறமொழிக் கலப்பு, 5
புத்தகங்களில் நஞ்சு, 78-9
புதிய துறைகளிலே தமிழ் வளம், 44, 71
புதிய யுகம், 65
புலமைக்கு ஜாதி குலம் தடையாக இல்லை, 55
புலவர் அரசர்களை அறநெறியில் நிறுத்துதல், ஆதிக்கம் முதலியன, 55-7. சிறிய தலைவரை நாடி அலைந்தது, 41-2, முடி பெறுதல், 54
புலவராற் பாடப் பெறுதலின் சிறப்பு, 58-9
புலவரின் வரலாறுகளுக்கு ஆதாரங்கள், 60
புலவரின் நன்றியறிவு, 57, பண்புகள், 59, பரிதாப நிலை, 42, பெயர்கள், 51-9
புலவரைப்பற்றி நம்பத்தகாத செய்திகள், 62-3
பூசை முறை தமிழரிடமிருந்து மற்றவர்களுக்குப் பரவியது, 28
பேச்சுக் கலை, 75
பேச்சுத் தமிழ், 78
பொருளிலக்கணம், 14
மணிப் பிரவாள நடை, 35
மத நூல்கள், 24
மாபெருந் தமிழகம், 76
முத்தமிழ், 4
மூன்று சங்கங்கள், 12-3
மொழிக் குடும்பங்கள், 5
மொழிகள் வளரும் விதம், 11
மொழிகளின் தோற்றம், 5
மொழி வளர்ச்சி இருவகை, 80
மொழி வளர்ச்சியில் இயற்கை நியதி, 83-4
யாழ் வேறு, வீணை வேறு, 47
வங்கம் காட்டிய வழி, 84
வளரும் தமிழ், 71-7
வசன நடை, 65-6
விஞ்ஞானம், 74
விறலியர், 46
வெளி நாடுகளிலே தமிழ் 76-7.
வேற்றுமையில் ஒற்றுமை, 81-2

# கிராம ஜோதி நூல்கள்

**ச. கு. கணபதி ஐயர்** எழுதியவை

ஒவ்வொரு வீட்டிலும், ஒவ்வொரு பண்ணையிலும், ஒவ்வொரு கிராமத்திலும் அவசியம் இருக்க வேண்டிய நூல்கள். அன்றாடம் பலன் விளைக்கும் பயனுள்ள நூல்கள்.

கிராமங்களின் வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி

1. **பண்ணை வாழ்க்கை** விலை ரூ. 4/-
   விவசாயிகளுக்குப் பயன்படும் நூல்
2. **கோழி நோய்கள்** .. 3/-
   கோழி நோய்களைப் போக்கும் முறைகள்
3. **கறவை மாடு** .. 1/8-
   மாடுகளால் அதிகப் பயன் பெறும் யோசனைகள்
4. **வீட்டுப் பறவைகள்** .. 1/4-
   வீட்டில் கோழி முதலிய பறவைகளை வளர்க்கும் வழி
5. வீட்டு ரோஜா, தென்னாட்டுப் பழங்கள், இங்கிலீஷ் காய்கறிகள், கோழி முட்டை உற்பத்தி. .. -/15/-
6. **மண் வளம்** .. 1/8-
   பி. கோதண்டராமன் எழுதிய நூல்

**விவசாயம், பிராணி வளர்ப்புச் சம்பந்தமான வேறு நூல்களுக்கும் எழுதுக.**

**கிராம ஜோதி நூலகம்**

மயிலாப்பூர் :: சென்னை-4